விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினாறு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 01 வியாழக்கிழமை (16.12.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 362

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

RAMCO

## மன்மோகன், கலைஞர், சிதம்பரம் மூவரையும் கொல்ல புலிகள் சதி

### இந்திய மத்திய புலனாய்வுத்துறை எச்சரிக்கை





(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி மற்றும் இந்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் ஆகியோரை ஜனவரி மாத மளவில் படுகொலை செய்ய தமிழீழ விடுதலைப்புலிகள் திட்டமிட்டுள்ளதாக இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவு எச்சரித்துள்ளது. இதனையடுத்து இவர்களுக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. (16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு மீண்டும் உயிரூட்ட வெளிநாட்டு சக்திகள் முயற்சி

### இராணுவத் தளபதி தெரிவிப்பு



(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு மீண்டும் உயிரூட்ட வெளிநாடுகள் பலவும் முயற்சிக்கின்றதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய குற்றம் சாட்டுகின்றார்.

தற்போதைய நிலையில் முற்றாக முடக்கப்பட்டுள்ள புலிகள் (16ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்க அதிருப்தியாளர்கள் ஐ.தே.க. அரசை அமைக்க முயற்சி

### கயந்த கருணாதிலக எம்.பி. நம்பிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கமொன்றை ஏற்படுத்த, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் உள்ள அதிருப்தியாளர்களான அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள்,தற்போதைய அரசாங்கத்தை பதவிக்கு கொண்டு வருவதற்காக உழைத்த பெரும் எண்ணிக்கையிலானவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

கட்சியின் சம்மேளனத்தின் போது (16ஆம் பக்கம் பார்க்க)

## காயமடைந்த பூசகர் நேற்றிரவு உயிரிழந்தார்

(யாழ்ப்பாணம்)

சங்கானை முருகமூர்த்தி ஆலயத்திற்கு முன்பாக வைத்து இனந்தெரியாத ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஆலயத்தின் பிரதமகுரு நித்தியானந்த சர்மா (வயது 56) சிகிச்சை பலனின்றி நேற்றிரவு உயிரிழந்தார்.

கடந்த சனிக்கிழமை சங்கானை முருக மூர்த்தி ஆலயத் திற்கு முன்பாக வைத்து ஒரே குடும் (16ஆம் பக்கம் பார்க்க)

## வைகோவின் மனு குறித்து பதிலளிக்க அரசுக்கு ஆணை

(சென்னை)

விடுதலைப்புலிகள் அமைப்பின் மீது இந்திய அரசு விதித்த தடையை உறுதி செய்து மத்திய தீர்ப்பாயம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ தொடர்ந்த வழக்கில் மத்திய அரசு 3 வாரங்களுக்குள் பதிலளிக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கம் (16ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகள் படகு கவிழ்ந்து 27 பேர் பலி; அவுஸ்.நோக்கிச் சென்றபோது பரிதாபம்

### ஈழத்தமிழர்களும் சென்றிருக்கலாமென அச்சம்

(கொழும்பு)

இந்தோனேசியாவிலிருந்து அவுஸ்திரேலியா நோக்கிச் சென்று கொண்டிருந்த படகொன்று நேற்றுக் காலை ஏழு மணியளவில் கிறிஸ்மஸ் தீவுக்கு அருகே விபத்துக்குள்ளானது. இதில் பயணித்த 27 பேர் உயிரிழந்தனர்.

கடும் கடல் அனர்த்தத்தின் காரணமாகத் தூக்கி வீசப்பட்ட படகு அங்கிருந்த பாறையொன்றுடன் மோதியே விபத்துக்குள்ளானதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

குழந்தைகள், பெண்கள் உட்பட 70க்கு மேற்பட்டவர்கள் (16ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவச் சிப்பாயின் துப்பாக்கியை பயன்படுத்தியே சங்கானையில் சூடு

### யாழ்.இராணுவத் தளபதி விளக்கம்

(யாழ்ப்பாணம்)

இராணுவச் சிப்பாய் விற்ற துப்பாக்கியைக் கொண்டே சங்கானையில் பூசகர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ்.இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார். நேற்று யாழ்ப்பாணப் பத்திரிகைகளின் ஆசிரியர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் சிலர் பல் (16ஆம் பக்கம் பார்க்க)

மாபெரும் மலிவு விற்பனை

18.12.2010 சனிக்கிழமை - 24.12.2010 வரை

Special Offer!

அனைத்துப் பொருட்களும் உத்தரவாதத்துடன்



சுந்தர்சன்

மானிப்பாய்

30%

வரையான விலைக்கழிவில்

(C-1827)

NIBM BUILDING COMPETENCIES



A statutory Body under the Ministry of Youth Affairs & Skills Development

ஒளிமயமான எதிர்காலத்திற்கு NIBM வழிகாட்டும்

நாட்டின் நம்பிக்கை வாய்ந்த உயர் கல்வி நிலையம் வழங்கும் முகாமைத்துவ, தகவல் தொழில்நுட்ப மற்றும் ஆங்கில கற்கை நெறிகள் மூலம் வெற்றிகரமான எதிர்காலத்தில் அடியெடுத்து வையுங்கள்

- மனிதவள முகாமைத்துவத்தில் அடிப்படைக் கற்கை நெறி (ஆங்கிலத்திலும் தமிழிலும்)
- கணனித் தொழில்நுட்பத்தில் சான்றிதழ் கற்கை நெறி
- வியாபார முகாமைத்துவத்தில் சான்றிதழ் கற்கை நெறி
- ஆங்கில மொழியில் சான்றிதழ் கற்கை நெறி

தேசிய வியாபார முகாமை நிறுவனம்
40, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி இல: (021) 222 0360, 61, 62

அனுமதிகள் ஆரம்பமாகியுள்ளன!
முதலில் அனுமதிக்கப்படும் சிலருக்கு 25% கட்டணக் கழிவு.

NIBM BUILDING COMPETENCIES

Jaffna யாழ்ப்பாணம்

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். – கொழும்பு தனியார் பஸ் சேவைக்கு ஜனவரி முதல் அனுமதிப்பத்திர விநியோகம்

## சொகுசு பஸ்ஸிற்கு 11 இலட்சம் கட்டணம்

(கொழும்பு)

கொழும்பு– யாழ் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடவிரும்பும் தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு ஜனவரி 10 ஆம் திகதி தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்படும் என தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சர் சி.பி.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்கான வருடாந்த கட்டணம் சொகுசு பஸ்களுக்கு 11 இலட்சம் ரூபா எனவும் அரைச் சொகுசு பஸ்களுக்கு 7 இலட்சம் ரூபா எனவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை தனியார் பஸ் சாரதிகளுக்கும் நடத்துநர்களுக்கும் ஓய்வூதியத் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படும் எனவும் அவர்கள் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றிலும் அங்கத்தவர்களாக்கப்படுவர் எனவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கம் முறையான கேள்விப்பத்திர நடைமுறையை பின்பற்றாததால் கொழும்பு– யாழ் வழித்தடத்தில் அளவிற்கு அதிகமான தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடுவதாக தனியார் போக்குவரத்துச் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரட்ண நேற்று முன்தினம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சுமார் 100 பஸ்கள் அவ்வழித்தடத்தில் சேவையில் ஈடுபடுகின்றன. அவற்றில் பெரும்பாலானவற்றிற்கு அனுமதிப்பத்திரம் கிடையாது. யாழ்– கொழும்பு வழித்தடம் குறித்த மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கேற்ப பஸ் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவேண்டும் அதற்குப் பதிலாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் முறையற்ற நடவடிக்கைகள் காரணமாக அரசாங்கத்திற்கு பல மில்லியன் ரூபா இழப்பு ஏற்படுகிறது என அவர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே ஜனவரி 10 ஆம் திகதி மேற்படி அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக்கப்படும் என அமைச்சர் ரத்நாயக்க நேற்று தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாட்டில் சேவையில் ஈடுபடும் தனியர் பஸ்கள் இரவிலும் சேவையில் ஈடுபட வேண்டும் எனவும் இதற்காக ஜனவரிமுதல் நேர அட்டவணை அறிமுகப்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

போக்குவரத்துச் சேவையின் 60 சதவீதம் தனியார் பஸ்கள் மூலமும் 40 சதவீதம் இலங்கை போக்குவரத்துச்சபை பஸ்கள் மூலமும் இடம்பெற வேண்டும் என்பதே அரசாங்கத்தின் கொள்கை. இதற்காக இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு இன்னும் இரண்டாயிரம் பஸ்கள் தேவைப்படுகின்றன. எனவே ஆயிரம் பஸ்களை இறக்குமதி செய்வதுடன் மேலும் ஆயிரம் பஸ்களை பழுது பார்ப்பதற்கு திட்டமிட்டுள்ளேன் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (ச–5)

# ஜனாதிபதியின் செயலாளராக விரைவில் புதியவர் நியமனம்

(கொழும்பு)

ஜனாதிபதியின் குடும்பத்தினருக்குச் சகல விடயங்களிலும் முன்னுரிமை அளிக்கும் விடயம் காரணமாகத் தற்போதைக்கு ஜனாதிபதி செயலகத்தில் கசப்புணர்வுகள் ஆழமாகவேரோடிக் கொண்டிருப்பதாக அதன் ஊடகப் பிரிவிலிருந்து தகவல்கள் கசிந்துள்ளன.

அரசாங்கத்தின் அனைத்துத் துறைகளிலும் தமக்கு மிகவும் நம்பிக்கையானவர்களை நியமித்து, தன் குடும்பத்தினரை முன்னிலைப் படுத்துவதில் ராஜபக்ஷ குடும்பம் மிகவும் தீவிர முனைப்புடன் செயற்படுகின்றது.

அந்த வகையில் தற்போதைக்கு ஜனாதிபதியின் மேலதிக செயலாளராக இருக்கும் காமினி செனரத்தை மிக விரைவில் ஜனாதிபதி செயலாளராக நியமிப்பதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பெருவிருப்புக் கொண்டுள்ளார்.

காமினி செனரத் ஜனாதிபதியின் நெருங்கிய உறவுக்காரர் என்பதே அதற்கான காரணம் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

லலித் வீரதுங்க விரும்பினால் இலங்கையின் ஐக்கிய நாடுகளுக்கான நிரந்தரப் பிரதிநிதியாகப் பதவியேற்றுக் கொள்ளும்படி ஜனாதிபதி கூறிவிட்டாராம். அதன் காரணமாக தற்போதைக்கு ஜனாதிபதி தொடர்பில் லலித் வீரதுங்க கடும் அதிருப்தியில் இருப்பதாகத் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன. (எ–1)

# “முள்ளிவாய்க்கால் முடிபல்ல அதுவே தமிழர்களின் ஆரம்பம்”

## சிறிதரன் எம்.பி உரை

(வவுனியா)

“முள்ளிவாய்க்கால் எங்களுடைய முடிபல்ல அதுவே தமிழர்களின் ஆரம்பம்” என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்தார்.

வவுனியா முத்தையா மண்டபத்தில் நடைபெற்ற மனித உரிமைகள் தினத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் கூறியதாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ்க் கட்சிகளின் அரங்கமும் தற்போது சந்தித்திருப்பது ஒரு பயனற்ற விடயமே. இது எவ்விதத்திலும் பயன்படப்போவதில்லை. இவர்களால் தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வை பெற்றுக்கெள்ள முடியாது.

இந்த இணைவில் எனக்கு உடன்பாடு இல்லை. அதனால் நான் அந்த நிகழ்வுக்குப் போகவில்லை. இலங்கையின் தமிழர்கள் என்ற ஒரு இனம் இருப்பதற்கும் அந்த இனத்தின் பிரச்சினைகள் இன்று சர்வதேச ரீதியில் கொண்டு செல்லப்பட்டதற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளே காரணம். புலிகள் தான் எங்களுடைய பிரச்சினைகளை வெளி உலகிற்கு கொண்டு சென்றார்கள் என்பதனை புரிந்துகொள்ள வேண்டும்.

முள்ளிவாய்க்கால் எங்களுடைய முடிபல்ல அது எங்களுடைய ஆரம்பம். அதிலிருந்து நாங்கள் மீண்டும் எழுவோம். புலம்பெயர்ந்து வாழ்கின்ற எமது மக்கள் தான் எங்களுடைய பலம். அங்கு அவர்கள் நாலு பேர் கூடிநின்று ஆர்ப்பாட்டம் செய்யவில்லை. புலம்பெயர் தமிழர்கள் இன்று ஒன்றுதிரண்டுள்ளார்கள். அவர்கள் தான் இப்பொழுது எங்களுடைய உரிமைப் பிரச்சினைகளை கொண்டு செல்கின்றார்கள் என்றார்.

இந் நிகழ்வில் வன்னி மாவட்ட த.தே.கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், யோகேஸ்வரன், எஸ்.சிறிதரன் மற்றும் ஈ.பி.டி.பியின் நாடளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், மனித உரிமை இல்லத்தின் சிரேஷ்ட சட்டத்தரணி கணேசலிங்கம், வவுனியா நகரசபைத் தலைவர் நாதன், மனித உரிமை இல்லத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் மேகலா, வவுனியாபிரதேசசெயலர், கிராம அலுவலர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனபெரும்பாலானவர்கள் கலந்து கொண்டனர். (ச–5)

# 2 ஆவது இராணுவ நீதிமன்ற வழக்கின் சகல பிரதிவாதிகளுக்கும் அழைப்பு

(கொழும்பு)

இரண்டாவது இராணுவ நீதிமன்ற தீர்ப்பிற்கு எதிரான வழக்கின் அனைத்துப் பிரதிவாதிகளையும் ஜனவரி 20 ஆம் திகதி மன்றில் ஆஜராகுமாறு மேன் முறையீட்டு நீதிமன்றம் நேற்றுப் புதன்கிழமை அழைப்பாணை விடுத்தது.

இரண்டாவது இராணுவ நீதிமன்றம் தன்னைக் குற்றவாளியாக் கண்டு தண்டனை வழங்கியதை எதிர்த்து முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆணைகோரும் மனு நேற்று விசாரணைக்கு வந்தது.

இந்த வழக்கின் பிரதிவாதிகளாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஜகத் ஜயசூரிய, மேஜர் ஜெனரல் எம்.பி. பீரிஸ், மேஜர் ஜெனரல் எஸ்.டபிள்யு.எல்.தெளலகல, மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க, பிரதி சொலிஸிடர் ஜெனரல் ரியர் அட்மிரல் டபிள்யு.ஜே.எஸ்.பெர்னாண்டோ மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இரண்டாவது நீதிமன்றம் சரத் பொன்சேகாவிற்கு 30 மாத கடூழிய சிறைத்தண்டனை வழங்கியது குறிப்பிடத்தக்கது (ச–5)

# வடக்கு மாகாணத்தின் கல்வி மேம்பாட்டுக்கென ஐ.நா நிறுவனங்கள் உதவி

வடக்கு மாகாண கல்வி மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு 2011 ஆம் ஆண்டில் உதவி வழங்க ஐ.நா நிறுவனங்கள் முன்வந்துள்ளன. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வடக்கு மாகாண கல்வி மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு யுனிசெப் உள்ளிட்ட ஐ.நா நிறுவனங்கள் உதவிகளை வழங்கவுள்ளது. இத்திட்டங்களை 2011 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு ஐ.நா நிறுவனங்கள் ஜனாதிபதி செயலணியின் அனுமதியைக் கோரியுள்ளன. வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளுக்கு அமைவாக இத் திட்டங்களுக்கு ஐ.நா நிறுவனங்கள் உதவிகளை வழங்கவுள்ளது.

இதில் பாடசாலைக் கட்டிடங்களின் திருத்தம், ஆசிரியர்களுக்கு ஆங்கிலம், கணிதம், விஞ்ஞான பாடங்களில் கற்பித்தல் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல் மற்றும் ஆசிரியர்களுக்கான போக்குவரத்து, தங்குமிட வசதியை ஏற்படுத்தல், முன்பள்ளிகளுக்கு கட்டிடம் அமைத்தல், முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கல் ஆகிய திட்டங்கள் முன்வைக்கப்பட்டு ஐ.நா நிறுவனங்களினால் கொள்கை ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. (ச–5)

# மடத்தடியில் விபத்து இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மடத்தடிச் சந்தியில் நேற்று மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்தில் படுகாயமடைந்த நிலையில் குருநகரைச் சேர்ந்த எஸ்.சாந்தகுமார், கோண்டாவிலைச் சேர்ந்த ஆர்.இரவீந்திரன் ஆகியோரே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச–7,51)




# சங்கானைச் சம்பவத்தைக் கண்டித்து கொழும்பில் இன்று கண்டனக் கூட்டம்

(கொழும்பு)

சர்வதேச இந்து மத குருமார் பீடத்தின் ஏற்பாட்டில், சங்கானையில் இடம்பெற்ற இந்துமத குருமார் மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை கண்டித்து கண்டனக் கூட்டமும், பத்திரிகையாளர் மாநாடும் இன்று பகல் 11 மணி தொடக்கம் 12 மணிவரை கொழும்பு கொச்சிக் கடை ஸ்ரீசித்தி விநாயகர் தேவஸ்தானத்தில் சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி ஸ்ரீஜயப்பதாச சாம்பசிவ சிவாச்சார்யர் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் கண்டனக் கருத்துரையினை ஜனாதிபதியின் இந்து மத இணைப்பாளர் சிவஸ்ரீ பாலரவி சங்கர சிவாச்சாரியார், இந்து மாமன்ற செயலாளர் கந்தையா நீலகண்டன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

அனைத்து சிவாச்சார்யர்கள், குருமார்கள், ஆலய தர்மகர்த்தாக்கள், சைவ அபிமானிகள் அனைவரையும் இக் கண்டனக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த வாரம் யாழ்.சங்கானை முருகமூர்த்தி ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ.நித்தியானந்தசர்மா வீட்டில் இடம்பெற்ற கொள்ளைச்சம்பவம் மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமானது மிகுந்த கண்டனத்திற்குரியதும் வேதனைக்குரியதுமான விடயமாகும் என சிறி ஐயப்பன் சேவா பீடாதிபதிகளும் ஜனாதிபதியின் இந்துமத விவகார இணைப்பாளருமான தேசபந்து சிவஸ்ரீ பால.ரவிசங்கர சிவாச்சார்யர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள்.

தற்போதைய சமாதான சூழ்நிலையில் வடக்குக் கிழக்கில் அதிகரித்து வரும் கொள்ளைச் சம்பவங்கள் அந்த மக்கள் மத்தியில் அரச சிவில் நிர்வாகம் தொடர்பில் உள்ள நம்பிக்கைக்கு பாதகமாக அமைந்துவிடும். சமூகத்தில் உயர் நிலையில் போற்றப்பட வேண்டிய குருமார் பாதிக்கப்படுவது உடனடியாக தடுக்கப்பட வேண்டிய விடயமாகும்.

குறிப்பிட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எத்தரப்பினர் ஆயினும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படுவதுவே பாதுகாப்புத் தரப்பின் தலையாய கடமையாகும் என அவர் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச–7)

யாழ்ப்பாணம் மாநகர சபை
ஆதனவரி தொடர்பான அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாநகரசபை நிர்வாக எல்லைக்குட்பட்ட ஆதனங்களுக்குரிய ஆதனவரி நிலுவைகளை 31.12.2010 இற்கு முன்னர் செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள். வெற்றுக் காணிகள், சேதமடைந்த கட்டிடங்கள், பராமரிப்பற்ற நிலையிலுள்ள சகல ஆதனங்களின் ஆதனவரியினை 31.12.2010 இற்கு முன்னர் செலுத்தத் தவறும் ஆதனங்களைச் சபை பொறுப்பேற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதனைச் சகல ஆதன உரிமையாளர்களும் கவனத்தில் எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

திருமதி யோகேஸ்வரி பற்குணராசா,
மாநகரமுதல்வர்.
யாழ்ப்பாணம்

மாநகர சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2010.12.13 (சி-1831)

வீட்டுடன் காணி விற்பனைக்கு

14/1 அம்மன் வீதி கந்தர் மடத்தில் (4) நாலு அறையுடன் கூடிய (4) பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு
(சிறி) 0750472976
(ராசன்) 0772718436 (325)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## நோன்பு

ஒரு தேரில் 5 குதிரைகள் பூட்டியிருக்கிறது. அந்தத் தேர் போய்ச் சேர வேண்டிய இடத்துக்குப் போக வேண்டுமானால் 5 குதிரைகளும் ஒரே வேகத்திலும் ஒரே திசையிலும் போக வேண்டும்.

ஒவ்வொன்றும் ஒவ்வொரு திசையில் போனாலும் ஆபத்து. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வேகத்தில் போனாலும் ஆபத்து. அதுசரி, அந்தத்தேர் எங்கே இருக்கிறது என்று கேட்கிறீர்களா? நம்முடைய சரீரம்தான் அந்தத் தேர்.

ஐம்புலன்கள் என்று சொல்கிறோமல்லவா, மெய், வாய், கண், மூக்கு, செவி இவை ஐந்தும் 5 குதிரைகள். அவை ஐந்தும் ஒரே திசையில் போக வேண்டும்.

அதை மறந்து விட்டு, கை ஒன்று செய்ய, வாய் ஒன்று பேச, கண் ஒன்று பார்க்க... இப்படியிருந்தால் வாழ்க்கை என்னத்துக்கு ஆகும்?

வாழ்க்கையை நெறிப்படுத்துவதற்கான ஒரு முயற்சிதான் நோன்பு.

உண்ணாநோன்பு என்பது உலகம் முழுவதும் எல்லா மதமும் ஏதோ ஒரு வகையில் வலியுறுத்தும் ஒரு விடயம். இஸ்லாமும் இதை ஒரு முக்கிய கடமையாக வலியுறுத்துகிறது.

இப்புனித நோன்பு உணர்ச்சிகளை ஒரு கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வருகிறது. ஆன்மாவைத் தூய்மைப்படுத்தி ஒளிரச் செய்கிறது. தொழுகைக்கு சுவையளிக்கிறது. உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கு உதவுகிறது.

ஏழை எளியவர்கள் மீது அனுதாபம் கொள்ள கற்றுக் கொடுக்கிறது. நோன்பு இருப்பதால் மருத்துவ ரீதியாகவே பல மாறுதல்கள் உடம்பில் ஏற்படுகிறது.

இரத்த அழுத்தத்தை குறைக்கிறது. அத்துடன் இரத்தக் கட்டியை கரைக்கும் சக்தியை இரத்தத்தில் அதிகப்படுத்துகிறது.

மற்றவர்கள் மீது அனுதாப உணர்வு வளர்வதற்கும் சகிப்புத் தன்மை வளர்வதற்கும் நோன்பு துணையாக இருக்கிறது. உலகத்தில் மனிதர்கள் ஒருவரை ஒருவர் சரியாகப் புரிந்து கொள்ளாததால்தான் பலவிதமான பிரச்சினைகள் உண்டாகிறது.

மனிதனை மனிதன் சரியாகப் புரிந்து கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொடுப்பது நோன்புதான். இந்த நோன்பு இறைவனுக்கு நாம் நெருக்கமாக இருக்கிறோம் என்ற உணர்வை ஏற்படுத்தும் நோன்பு. இதுவரைக்கும் நாம் பார்த்தது இறைவன் மீது நம்பிக்கையுள்ளவர்கள் கடைப்பிடிக்கும் நோன்பைப் பற்றித்தான்.

இதெல்லாம் இருக்கட்டும். இறைவன் மீது நம்பிக்கையே இல்லாத ஒருத்தன் சாப்பிடாமல் இருக்க வேண்டுமென்று ஆசைப்பட்ட கதையொன்று உங்களுக்குத் தெரியுமா? அவனிடம் ஒருத்தர்,"நம் வயிற்றை நிரப்புவது ஆண்டவன் தான்" என்றார்.

"அதெப்படி அவர் வந்து நிரப்புவார்? நாமதானே கையால் எடுத்து சாப்பிடவேண்டும்"என்றான் இவன்.

அதுமட்டுமல்ல, அதை சோதித்துப் பார்க்கவேண்டும் என்றும் ஆசைப்பட்டான்.

உடனே மனைவியிடம் போய்"கட்டுச் சோறு கட்டிக் கொடு" என்றான். ஒரு பார்சல் கட்டி எடுத்துக் கொண்டான். நேராக மனிதனே இல்லாத ஒரு பாலைவனத்துக்குப் போனான். ஒரு இடத்தில் உட்கார்ந்தான். சோற்றுப் பார்சலை முன்னுக்கு வைத்தான்.

"நான் இதைக் கையால் தொடப்போவதில்லை. நானாக சாப்பிடாத போது ஆண்டவன் எப்படி என்னுடைய வயிற்றை நிரப்புவார் பார்க்கலாம்" என்றான்.

கையைக் கட்டிக் கொண்டு கண்ணை மூடிக் கொண்டு பேசாமல் உட்கார்ந்தான். சிறிது நேரத்தில் அந்தப் பக்கமாக 2 பேர் வந்தார்கள். அவர்களுக்கு அகோரபசி. இருவரில் ஒருத்தன் அந்தப் பொட்டலத்தை எடுக்கப் போனான். இன்னொருவனுக்குச் சந்தேகம்.

"இவன் ஏன் பொட்டலத்தை வைத்துக் கொண்டு சாப்பிடாமல் உட்கார்ந்திருக்கிறான். ஒருவேளை இதில் விஷம் கலந்திருக்குமோ?

"இருந்தாலும் இருக்கும்" என்றான் மற்றவன்.

அந்த ஆளிடமே கேட்போம் என்று பேச்சுக் கொடுத்துப் பார்த்தான். அந்த ஆள் பேசவேயில்லை. சந்தேகம் வலுத்தது.

இருவரும் அந்த ஆளை வலுக்கட்டாயமாக பிடித்துக் கொண்டு வாயில் சாப்பாட்டை திணித்தார்கள். வேறு வழியில்லாமல் சாப்பிட்டான். இப்ப அந்த ஆளுக்கு வயிற்றை நிரப்பியது யார்? யோசித்துப் பாருங்கள்.

அதன்பின் அந்தப் பார்சலில் இருந்தவை முழுவதையும் அந்த இரண்டுபேரும் காலி பண்ணிவிட்டுப் போய்விட்டார்கள். இந்த ஆள் ஆச்சரியப்பட்டுப் போய் உட்கார்ந்திருந்தான்.

"என்னப்பா இறைவனின் கருணையை நினைத்து ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கிறாயா? என்று அவனைப் பார்த்துக் கேட்டார் பழைய நண்பர்.

அதற்கு அவன் "நான் அதை நினைத்து ஆச்சரியப்படவில்லை. எப்பொழுதும் கஷ்டப்பட்டுச் சாப்பிடுகிற எங்க வீட்டுச் சமையலை அந்த இரண்டு பேரும் அவ்வளவு பிரியமாக சாப்பிட்டார்களே... அந்த அளவுக்கு அதில் என்ன இருக்கிறது? அதை நினைத்துத்தான் திகைத்துப் போய் உட்கார்ந்திருக்கிறேன்."என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கொழும்பு விகாரமகாதேவி பூங்காவைப் போன்று சுப்பிரமணியம் பூங்காவும் பிரசித்திபெறும்

## யாழ். மாநகர முதல்வர் தெரிவிப்பு

முப்பது வருடங்களின் பின்பு யாழ்ப்பாணத்தில் அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இத்தகைய சூழ்நிலையில் பலநிறுவனங்கள்அபிவிருத்திகளுக்கு உதவ முன்வருகின்ற போதும் சிலரின் உதவியே கிடைக்கப்பெறுகிறது என யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்துள்ளார்.

யாழ். சுப்பிரமணியம் பூங்காவில் எலிபன்ட் கவுஸ் நிறுவனத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்டு இணைக்கப்பட்டுள்ள சிறுவர் விளையாட்டு உபகரணங்களை பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், யுத்த காலத்திற்கு முன்பு இவ்விடம் எவ்வாறு சிறப்பாக காட்சியளித்ததோ அதேபோன்று தற்போது புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பூங்காவின் வேலைத்திட்டமானது 60 வீதம் பூர்த்தியான நிலையில் புத்துயிர் பெற்று காட்சியளிப்பது மனதுக்கு மகிழ்ச்சி தருகிறது.

யுத்த காலத்தில் பாதிப்புற்ற பகுதிகளில் இந்த சுப்பிரமணியம் பூங்காவும் ஒன்றாகும். கொழும்பில் உள்ள பிரசித்தி பெற்ற விகாரமகாதேவி பூங்காவைப் போன்று எதிர் வரும் காலத் தில் இந்தப் பூங்காவும் பிரசித்திபெற்று விளங்கும். மிகவிரைவில். இப் பூங்காவிற்கு மின்விளக்குகள் பொருத்தப்படுவதோடு பார்வையிடும் நேரமும் அதிகரிக்கப்படும்.

அதேவேளை கட்டணம் அறவிடப்பட்டே மக்கள் உள்நுழைய அனுமதிக்கப்படுவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2-6)

# இனந்தெரியாதோரின் நடமாட்டத்தால் அச்சம்

(கொழும்புத்துறை)

உடுவில் சந்திரபுரம் மல்வம் வீதியில் கடந்த 12 ஆம் திகதி இலக்கத்தகடு இல்லாத வெள்ளை வாகனத்தில் சந்தேகத்திற் கிடமான முறையில் இனம்தெரியாதோர் நடமாடியுள்ளனர். இதைக் கண்ணுற்ற அப்பகுதி இளைஞர்கள் கையடக்கத் தொலைபேசி மூலம் மற்றவர்களையும் அழைத்து தகரங்களில் தட்டி கூச்சலிட்ட போது இனந்தெரியாத நபர்கள் வாகனத்தை எடுத்து தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-3-51)

# வீடமைப்பு அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகம் 20 ஆம் திகதி திறப்பு

வீடமைப்பு அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தின் புதிய கட்டடம் எதிர்வரும் 20 ஆம் திகதி 155 ஆம் கட்டைப்பகுதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.கடந்த கால யுத்தத்தினால் இக்கட்டடம் சேதமடைந்த நிலையில் வேறு இடத்தில் இயங்கி வந்தது.இந்நிலையில் மீளவும் புனரமைக்கப் பட்டு இக்கட்டடம் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் வீடமைப்பு,பொறியியல் நிர்மாணத்துறை அமைச்சர் விமல் வீரவன்ச, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ , மு.சந்திரகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை வீடமைப்பு அதிகார சபையினால் முறிகண்டி பொன்நகர் பகுதியில் 50 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-30)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 200 | 150 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 220 | 250 | 180 |
| தக்காளி | 80 | 120 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 |
| கோவா | 70 | 100 | 80 |
| கரட் | 80 | 100 | 100 |
| பூசணி | 50 | 50 | 40 |
| புடோல் | 110 | 120 | 90 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 180 | 200 | 150 |
| பெரிய வெங்காயம் | 150 | 160 | 140 |
| பாகற்காய் | 200 | 240 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 90 |
| கருணைக் கிழங்கு | 50 | 80 | 80 |
| பயற்றங்காய் | 160 | 200 | 250 |
| லீக்ஸ் | 100 | 140 | 180 |
| பீற்றூட் | 90 | -- | 100 |
| கறிமிளகாய் | 200 | 250 | 240 |
| முருங்கைக்காய் | 250 | -- | -- |
| போஞ்சி | 140 | 150 | 150 |
| கத்தரிதம்புள்ள | 120 | 180 | 70 |
| கீரை - 1 பிடி | 30 | 40 | -- |
| தேசிக்காய் | 100 | 120 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 40 |

# இராசி பலன்

*16.12.2010*
*(மார்கழி 01, வியாழக்கிழமை)*
*தசமி பிற்பகல் 12.19 மணிவரை*
*ரேவதி பிற்பகல் 12.22 மணிவரை*
*இராகுகாலம் 1.52-3.22 மணிவரை*
*சுபநேரம் 7.52-9.22 மணிவரை*
*சித்தாமிர்தம்*

**மேடம்** தொழிலில் கூட்டாளிகளின் ஒத்துழைப்பு கொஞ்சம் குறையலாம், பெரிய மனிதர்களின் சந்திப்புகிட்டும், சிந்தனை மிகுதியுண்டு.

**இடபம்** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், நித்திரைக் குறைவுண்டு, இடமாற்றச் சிந்தனை மேலோங்கும்.

**மிதுனம்** தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், வருமானம் அதிகரிக்கும், எடுத்த கருமங்கள் நிறை வேறும், புதிய நபர்களின் சந்திப்புண்டு.

**கடகம்** தொல்லை தந்தவர்கள் தோள் கொடுத்து உதவுவர், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், ஆரோக்கியமாக இருப்பீர்கள்.

**சிங்கம்** மறைமுகப் போட்டிகளை எளிதில் சமாளிப்பீர்கள், சிந்தித்து செயற்பட்டு சிறப்படையும் நாள், சொத்துப் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும்.

**கன்னி** தேவையற்ற விடயங்களை தவிர்த்துக் கொள்வது நல்லது, பிரயாணத்தில் விழிப்புணர்ச்சி தேவை, போசன சுகமுண்டு, உடல் நலக் குறைவுண்டு.

**துலாம்** சுற்றத்தார் வருகையால் சுகமடையும் நாள், பொருளாதார நிலை உயரும், நண்பர்கள் சந்திப்பு ண்டு, எடுத்த காரியம் கைகூடும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், உடல் நலம் உற்சாகமாக இருக்கும், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

**தனுசு** பொன்னான எதிர்காலத்தை அமைக்க வழிபிறக்கும், கோயில் வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், பிள்ளைகள் வழியில் பெருமைப்படும் சம்பவங்கள் நடைபெறலாம்.

**மகரம்** பெற்றோர் மீது பிரியம் கூடும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், வாகன யோகமுண்டு, நண்பர்களின் சந்திப்புண்டு.

**கும்பம்** தடைப்பட்ட காரியம் கைகூடும், சமுதாயப் பணிகளில் ஆர்வம் கூடும், குடும்பத்தினர்கள் ஒத்துழைப்பால் மகிழ்ச்சியடைவீர்கள், தனவரவு திருப்தி தரும்.

**மீனம்** புத்தி சாதுரியமாக நடந்து காரியம் சாதிப்பீர்கள், பண வரவுண்டு, மனதில் உற்சாகமும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவரொட்டி மீதான கட்டுப்பாடுகள் கருத்து சுதந்திரத்துக்கு சவாலாகவுள்ளது

## விஜித ஹேரத் தெரிவிப்பு

(கொழும்பு)

சுவரொட்டிகள் மீதான கட்டுப்பாடுகள் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்திற்கு சவாலாக உள்ளது என ஜே.வி.பி.யின் பிரசார செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் (கபே) நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் எழுதிய ரஜுன் தெனீமே கலாவ-தேசபாலன சன்னிவேதனய (மன்னர்களை உருவாக்கும் கலை -அரசியல் தகவல்பரிமாற்றம்) என்னும் நூலின் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே விஜித ஹேரத் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், தற்போது ஊடகங்களின்றி அரசியல்வாதிகளுக்கு இருக்க முடியாத நிலை உள்ளது .அதேபோல் ஊடகவியலாளர்களுக்கும் அரசியல்வாதிகள் தேவைப்படுகின்றனர். தகவல் பரிமாற்றத்திற்காக பல்வேறு வழிகள் கையாளப்படுகின்றன.

ஜே.வி.பி பற்றி பேசும் போது சுவரொட்டிகள் பற்றி பேசாதிருக்க முடியாது .ஆனால் இப்போது சுவரொட்டி கலாசாரம் புதிய சவால்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. அண்மையில் சாதிக நொலத் மரணய (சாட்சியில்லாத மரணம்) எனும் நாடகத்திற்கான சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்தவர்களை பொலிஸார் தடுத்து வைத்தனர். அந்த சுவரொட்டி அரசியல் தொடர்பானது அல்ல. நாடகம் தொடர்பானது என பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு நான் விளக்க வேண்டியிருந்தது.

இதேபோல் மொனறாகலையில் டெபின்டோ என்ற நாடகத்திற்கான சுவரொட்டி ஒட்டுவதையும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தடுத்தார். டெபின்டோ என்று யாரை குறிப்பிகிறீர்கள் என்று தெரியாது. ஜனாதிபதியைத்தான் அப்படி கூறுகிறீர்களோ தெரியாது. எனவே அந்த சுவரொட்டியை அனுமதிக்க முடியாது என்றார்.

18ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது அதற்கு எதிராக. யாழ்ப்பாணத்தில் சுவரொட்டி ஒட்டிக்கொண்டிருந்த ஒருவரை பொலிஸார் கைது செய்தனர். பின்னர் சுவரொட்டி ஒட்டியமைக்காக அவரை தடுத்து வைத்திருக்க முடியாததால் வீடொன்றுக்குள் அத்து மீறி நுழைந்தமை, திருட முயற்சித்தமை போன்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு அவர் மீது வழக்குத் தொடரப்பட்டது.

சந்தேக நபர் மீதான குற்றச்சாட்டுகளை நீதிமன்றத்தில் தெரிவித்த பொலிஸ் அதிகாரி



தடயப் பொருளாக மேற்படி சுவரொட்டி களையும் சமர்ப்பித்தார். அப்போது வீட்டில் திருடுவதற்காக எதற்காக 18ஆவது அரசியலமைப்புக்கு எதிரான சுவரொட்டிகளையும் எடுத்துச் சென்றார் ஏ்ன்ற கேள்வி நீதிமன்றில் எழுந்தது. அதனால் அந்த நபர் திங்களன்று விடுதலை செய்யப்பட்டார்.

சுவரொட்டிகள் மீதான கட்டுப்பாடுகள் சாதாரண விடயம் போல் தென்படலாம். ஆனால் அது கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்திற்கு சவாலாக அமைகின்றன. கீர்த்தி தென்னகோன் எழுதிய நூல் போன்று இதுவரை சிங்கள மொழியில் வெளியாகவில்லை. இது ஓர் சிறந்த முயற்சியாகும் என்றார். (ஸ்ரீ-2)

# 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் தடுத்து வைப்பு

## ஜனநாயக தேசிய கூட்டமைப்பு தெரிவிப்பு

8 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக ஜனநாய தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் பங்கு கொண்டு உரையாற்றிய கூட்டமைப் பின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதனால் வடக்கில் பல பிரச்சினைகள் குறிப்பாக பெற்றோர்கள் தமது பிள்ளைகளை தேடி பல காலமாக அச்சத்துடன் வாழந்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் காணாமற் போனவர்களையும் கைதானவர்களையும் விடுவிப்பதாக கூறி உறவினர்களிடம் பணத்தைப் பெற்று ஏமாற்றும் குழுக்கள் தோன்றியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் அரசாங்கம் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விபரங்களை உடனடியாக வெளியிடுமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-9)

# திருப்பாவை உற்சவம்

வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதப் பெருமாள் கோயிலில் மார்கழித் திருப்பாவை உற்சவம் இன்று வியாழக்கிழமை அதிகாலை 3 மணிக்கு திருப்பள்ளி எழுச்சியுடன் ஆரம்பமாகவுள்ளது.

இதில் அபிஷேகம்,விசேட பூசை ஆண்டாள் நாச்சியார் திருவீதி உலா வருதல், அரங்கனுக்கு சூடிக்கொடுத்த மாலையை சூடுதல் , திருப்பாவை முற்றோதல், நாம ஜெபம்,சமயச் சொற்பொழிவு ஆகியன இடம் பெற்று காலை 6 மணிக்கு நிறைவு பெறும். இவ்வாறு மார்கழி மாதம் 30 நாட்களும் உற்சவம் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-2)

# வடமத்திய மாகாணத்தில் சிறுநீரக பாதிப்பை ஏற்படுத்தும் தாவரம் ஆய்வில் தகவல்

பேராதனைப் பல்கலைக்கழக வைத்தியத் துறையைச் சேர்ந்த குழுவினர் மேற்கொண்ட புதிய ஆய்வு ஒன்றின் மூலம் வட மத்திய மகாணத்தில் உள்ளவர்களை அதிகமாகப் பாதித்து வரும் சிறுநீரக வியாதிக்கான காரணங்களில் ஒன்றைக் கண்டறிந்துள்ளனர்.

சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்திய கலாநிதி தம்மிகா மெனிக்கோ திசாநாயக்கா தலைமையிலான குழு மேற்கொண்ட ஆய்வின் படி வடமத்திய மாகாணத்திலுள்ள நீர் நிலைகளில் வளர்கின்ற அல்கா எனப்படும் தாரவத்தினால் (புலூகிறீன் அல்கா) உற்பத்தி செய்யப்படும் ஒருவகை நச்சுப் பொருளே சிறுநீரக பாதிப்பிற்குக் காரணம் எனத் தெரிவித்துள்ளனர்.

நீரோடு இந்த நச்சுப் பொருள் கலப்பதால் சிறுநீரகப் பாதிப்பு ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் குழுவினர் ஒருவருட காலத்திற்கு மேலாக மேற்கொண்ட ஆய்வுகளின் படியே அத்தகவலை வெளியிட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# அரசியல் தீர்வுக்காக அமைக்கும் குழுவில் முஸ்லிம் காங்கிரசும் இணைக்கப்படவேண்டும்

## பிரதியமைச்சர் பசீர் சேகுதாவுத் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் தீர்வுக்காக அமைக்கும் குழுவில் முஸ்லிம் காங்கிரஸையும் இணைக்க வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக பிரதியமைச்சர் பசீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

ஏறாவூரில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும் கூட்டுறவு மற்றும் உள் நாட்டு வர்த்தக பிரதியமைச்சருமான பசீர் சேகுதாவூத் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,

நாட்டின் தலைவராக விளங்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் தான் இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வினை உறுதியாக முன் வைக்க முடியும். இது தொடர்பாக ஜனாதிபதி மீது சிறுபான்மை இன மக்கள் அதிக நம்பிக்கை வைத்துள்ளனர்.

கடந்த காலங்களில் நடைபெற்ற எந்தவொரு தேர்தலிலும் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்காத முஸ்லிம் காங்கிரஸ் தற்போது அரசாங்கத்துடன் இணைந்துள்ளது.

அதுமாத்திரமன்றி ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு அடுத்த படியாக இரண்டாவது தனிக் கட்சியாகவும் முஸ்லிம் காங்கிரஸ் திகழ்ந்து வருகின்றது.

இதேவேளை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு அரசாங்கத்துடன் எதிர்ப்பு அரசியலைக் கைவிட்டு நடுநிலைப் போக்கை கையாண்டு வருகின்றது. இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நல்ல அரசியல் வெளிப் படுத்துகையைக் காட்டுகிறது.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் தமிழ்க் கட்சிகளின் அரங்கமும் ஏற்கனவே பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ள அதேவேளை கூட்டமைப்புக்கும் ஜனாதிபதிக்குமிடையில் நேரடிப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதன்போது அரசாங்கமும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் இணைந்து அரசியல் தீர்வுக்காகவும் வடக்கு- கிழக்கு மாகாண புனர்வாழ்வுக்காகவும் அமைக்கவுள்ள குழுக்களில் முஸ்லிம் காங்கிரஸும் இணைக்கப்பட வேண்டும் என்று தமது கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவ்வாறான சூழ்நிலையின் போது முஸ்லிம் மக்களின் நலன்களைக் கருத்திற் கொண்டு முஸ்லிம் காங்கிரஸும் ஏனைய முஸ்லிம் கட்சிகளும் ஒன்றாகச் செயற்பட்டு ஒரு பக்குவப்பட்ட அரசியல் போக்கினை வெளிப் படுத்த வேண்டும் எனவும் பிரதி அமைச்சர் வலியுறுத்தினார். இவ்வாறு செயற்படும் போது தான் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள புதிய சூழ்நிலையில் முஸ்லிம் மக்களுக்கான அபிவிருத்தி உட்பட ஏனைய தன்மைகளையும் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# ஜனவரி முதலாம் திகதி முதல் மின்சார கட்டணங்களில் மாற்றம்

(கொழும்பு)

ஜனவரி முதலாம் திகதி முதல் மின் கட்டணங்களில் மாற்றம் கொண்டுவரப்படும் என மின்சக்தி எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலே இந்த மாற்றம் கொண்டுவரப்படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

மின் கட்டண திருத்தம் தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் மின்சக்தி எரிசக்தி அமைச்சில் நடைபெற்றது. இங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர்,

பொதுமக்களின் கருத்தை பெற்ற பின்னரே மின் கட்டணங்களில் மாற்றம் கொண்டு வரப்படும். இது தொடர்பாக மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு முன்னிலையில் தமது கருத்துக்களை முன் வைக்க மக்களுக்கு அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

மின்சார சபை ஈட்டி வரும் பாரிய நஷ்டத்தை ஈடு செய்யும் வகையில் மின் கட்டணத்தை அதிகரிக்க வரவு -செலவுத் திட்டத்தினூடாக யோசனை முன் வைக்கப்பட்டது.

90 அலகுகளுக்கு மேல் மின்சாரம் பாவிக்கும் பாவனையாளர்களுக்கே மின் கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளது. 45 இலட்சம் மின் பாவனையாளர்களில் 78 வீதமானவர்கள் 90 அலகுகளுக்கு குறைவாகவே மின்சாரம் பாவிக்கின்றனர். எனவே சாதாரண மக்கள் மின் கட்டண உயர்வினால் பாதிக்கப்பட மாட்டார்கள். குளிரூட்டி குளிர்சாதனப் பெட்டி போன்ற சொகுசு சாதனங்கள் பாவிப்போருக்கான கட்டணமே உயர்த்தப்பட்டுள்ளது.

இதேவேளை மத ஸ்தலங்கள், அரச நிறுவனங்கள், பாடசாலைகள் என்பவற்றுக்கான கட்டணம் 25 வீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளது.

புதிய கட்டண திருத்தப்படி 91-120 அலகு வரை ஒரு அலகுக்கு 16 ரூபாவில் இருந்து 23.50 ரூபாவாக உயர்த்தப்படவுள்ளது. நிலையான கட்டணம் 180 ரூபாவில் இருந்து 300 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. 121.150 அலகு வரையான கட்டணம் 28.60 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

யூலை மாதத்தில் மீண்டும் மின் கட்டணங்கள் திருத்தப்படும் மின்சார சபை இலாபமீட்டினால் அதன் பலன் பாவனையாளருக்கே வழங்கப்படும் என்றார். (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மத்திய வங்கியின் வைரவிழாவை முன்னிட்டு

# ஐயாயிரம் ரூபா பெறுமதியான நாணயக்குற்றி வெளியீடு

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் வைர விழாவை முன்னிட்டு ஐயாயிரம் ரூபா பெறுமதியான நாணயக் குற்றியொன்றை வெளியிட மத்திய வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது.

மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் கப்ரால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இந்த நாணயக் குற்றியை உத்தியோகபூர்வமாக கையளித்து அதனை வெளியிட்டு வைப்பார்.

இலங்கை மத்திய வங்கியானது 1950.08.20ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. அத்துடன் 2010 .08.28ஆம் திகதி அன்று 60 ஆண்டுகளை பூர்த்தி செய்தமையை குறிக்கும் வகையிலேயே இந்த நாணயக் குற்றி வெளியிடப்படுகிறது.

இந்த நாணயக் குற்றியில் இலங்கையில் பொருளாதார வளர்ச்சியைக் குறிக்கும் வகையில் மரம் ஒன்றின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் அதன் பெறுமதி குறிக்கப்பட்டுள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இந்த நாணயம் அச்சிடப்பட்டுள்ளதால் ஐயாயிரம் ரூபா பெறுமதியான இந்த நாணயக்குற்றி 7ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும்.

கொழும்பில் உள்ள இலங்கை மத்திய வங்கியின் பிரதான காரியாலயத்திலும் மற்றும் நாட்டின் பல பாகங்களிலும் உள்ள அதன் கிளை அலுவலகங்களிலும் இந்த நாணயக்குற்றியை பெற்றுக்கொள்ளலாம் என மத்திய வங்கி அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# வாகன இறக்குமதி சலுகைகளை பாராளுமன்ற உறுப்பினர்கள் துஷ்பிரயோகம்

(கொழும்பு)

வாகன இறக்குமதி சலுகைகளை பாராளுமன்ற உறுப்பினர்கள் துஷ்பிரயோகம் செய்து வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் வரிச் சலுகைகளை பயன்படுத்தி இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் 3 ஆம் தரப்பினருக்கு கூடிய விலைக்கு விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சில வாகனங்கள் 16.5 மில்லியன் ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

50ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான சொகுசு வாகனங்களை வரிச்சலுகைகளுடன் பெற்றுக்கொள்வதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறான வாகனங்களுக்கு அதிகபட்சமாக 18 வீத வரி மட்டுமே செலுத்த வேண்டியுள்ளது.

இந்தச் சலுகைத் திட்டத்தைப் பயன்படுத்தி இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் செல்வந்த வர்த்தகர்களிடம் கைமாற்றப்படுவதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரதி அமைச்சர் ஒருவர் ஏற்கனவே வாகனத்தை விற்பனை செய்துள்ளதாகவும் மற்றுமொரு பாராளுமன்ற உறுப்பினர் இரத்தினபுரியில் உள்ள வர்த்தகர் ஒருவருக்கு விற்பனை செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அநேகமான பாராளுமன்ற உறுப்பினர்கள் சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்து அவற்றை விற்பனை செய்துள்ளனர். இவ்வாறான சட்டவிரோத வர்த்தக நடவடிக்கைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார நன்மைக்காக வாகனங்களை வேறு நபர்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் விற்பனை செய்வார்கள் என்பதனை அறிந்து கொண்டே அரசாங்கம் இந்த சலுகைத் திட்டத்தை அறிவித்துள்ளது என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# வவுனியாவில் பொலிஸ் பாதுகாப்பிலிருந்த இரண்டு கைதிகள் தப்பியோட்டம்

(கொழும்பு)

பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையதான சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தினால் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட இரு சந்தேகநபர்கள் பொலிஸ் பாதுகாப்பிலிருந்து தப்பிச் சென்ற சம்பவமொன்று வவுனியாவில் இடம்பெற்றுள்ளது.

மன்னாரிலிருந்து வவுனியா விளக்க மறியல் சாலைக்கு பஸ் மூலம் அழைத்துச் செல்லப்பட்ட இவ்விரு கைதிகளும், நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் வவுனியா சிறைச்சாலைக்கு அருகில் வைத்து தப்பிச் சென்றதாகவும் அவர்களைத் தேடும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டு வருவதாகவும் வவுனியா சிறைச்சாலை பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

பூந்தோட்டத்தைச் சேர்ந்த அழகையா கௌரிராசா, கற்குளம் சிதம்பரத்தைச் சேர்ந்த இராஜேந்திரன் ரவிக்குமார் ஆகிய இரண்டு கைதிகளுமே கைவிலங்கை கழற்றிக் கொண்டு தப்பியோடியவர்கள் என சிறைச்சாலை அதிகாரி கூறினார்.

இவர்களை கண்டுபிடிப்பதற்காக நேற்று முன்தினமிரவு வவுனியா நகரம் முழுவதும் பொலிஸார் தீவிரதேடுதல் நடவடிக்கை யினை மேற்கொண்டார்கள். சாதாரண சிவில் உடையில் இவர்கள் தப்பியோடியதாகவே தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

# இவ்வருடத்தில் ஆறு இலட்சம் சுற்றுலாப் பயணிகள் இலங்கை வருகை

இவ்வருடத்தில் நேற்று முன்தினம் வரை 6 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர்.

6 இலட்சம் என்ற எண்ணிக்கையை தொடும் சுற்றுலாப் பயணிகளை வரவேற்க பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தில் விசேட வைபவம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அவுஸ்திரேலிய தம்பதியினரே இந்த அதிர்ஷ்டசாலிகள் ஆவர். இவர்கள் லண்டனில் இருந்து யூ.எல்.501 என்ற விமானத்தின் மூலம் நேற்று முன்தினம் மாலை விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

சுற்றுலாச் சபையின் உயர் அதிகாரிகள் விமான நிலையத்தில் வைத்து இவர்களை வரவேற்றனர். (ஸ்ரீ)

# தமிழ்ப்பாடசாலைகளில் தமிழில் தேசியகீதம் இசைக்கப்பட்டமை சட்டத்தை மீறிய செயலாகும்

## ஹெல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

அரச வைபவங்களில் தேசிய கீதம் தமிழில் இசைக்கப்படுவதில்லை. எனவே, இதுவரை காலமும் தமிழ்ப்பாடசாலைகளில் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட்டுள்ளமை நாட்டின் சட்டத்தை மீறிய செயலாகும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்தார்.

தமிழக முதல்வர் கருணாநிதி இந்தியாவின் தேசிய கீதம் ஹிந்தியில் இசைக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதை விடுத்து எமது நாட்டில் தலையிடுவது அநாகரிகமான செயலாகும் என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஒரு நாட்டின் பெரும்பான்மை தேசிய இனத்தின் மொழியிலேயே தேசிய கீதம் இசைக்கப்படவேண்டும். அதற்கமைய எமது நாட்டில் சிங்களத்திலேயே இசைக்கப்பட வேண்டும். தமிழில் இசைப்பதை அனுமதிக்க முடியாது.

அவ்வாறெனில், எதிர்காலத்தில் ஆங்கிலத்திலும் இசைக்கப்பட வேண்டும் என கேட் பார்கள். இந்தியா ,பிரிட்டன் ,அமெரிக்கா போன்ற நாடுகளில் அவர்களது தேசிய மொழியில் மட்டுமே தேசிய கீதம் இசைக்கப்படுகிறது.

அரச வைபவங்களில் தேசிய கீதம் சிங்களத்தில் இசைக்கப்படும் போது தமிழ்ப் பாடசாலைகளில் இதுவரை காலமும் தமிழில் இசைக்கப்பட்டமை சட்டவிரோதமாகும்.

இதனை உடனடியாக தடை செய்ய வேண்டும். நாம் இந்தியாவின் காலனித்துவ நாடு அல்ல . எனவே தமிழ் நாடு முதலமைச்சர் தனது வேலையை பார்க்க வேண்டும். அதை விடுத்து எமது தேசிய கீதம் தொடர்பில் கருத்து கூறியிருப்பது அநாகரிகமான செயல் ஆகும் என்றார். (ஸ்ரீ-2)

# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்ட போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபையின் வரணி நூலகத்தினர் நடத்திய போட்டியில் வெற்றியீட்டியவர்களின் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு,

**கட்டுரைப் போட்டி**

**பிரிவு-1**

சி.ராகவி -(நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம்), க.சர்மினி -(மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்),சி.சிவதர்சினி (இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணியம் வித்தியாலயம்.

**பிரிவு-2**

இ.சாம்பவி -(மந்துவில் ஸ்ரீபாரதி வித்தி, க.சகீபன்(மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தி, கி.ஐசிந்தன் (இயற்றாலை அ.மி.த.க. பாடசாலை).

**பிரிவு-3**

தி.கவிப்பிரியா- (இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலம்),ஞா.சவுந்தர்யா -(இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்),மெ.தீபா -(இயற்றாலை அ.மி.த.க.பாடசாலை)

**பிரிவு-4**

ஞா.சார்த்திகா,க.லசிந்தனா,தே.லஜிதாயினி - (இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்)

**கவிதை**

ஜெ.நிதர்சி,ஞா. சவுந்தர்யா,தி.கவிப்பிரியா-(இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்)

**பொது அறிவு**

ஞா.கார்த்திகா, ஜெ.நிதர்சி, வி.ஜெசிந்தா (இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம்)

**வாசகர்களுக்கான பொது அறிவுப்போட்டி**

செ.துவாரகன்,வி.மயூரன்,ம.துவாரகன்

**முன்பள்ளி மாணவர்களிடையேயான போட்டிகள்**

**பேச்சுப்போட்டி**

கி.துபிதா- (இடைக்குறிச்சி சர்வோதய பாலர் பாடசாலை),இரண்டாமிடம் இருவர் கி.கர்ஷனா- (கௌரிபாலன் சைவப்பிரகாச முன்பள்ளி) சு.சாருஜா-(கலைவாணி முன்பள்ளி),

**அபிநயநடனம்**

கி.கர்ஷனா-(கௌரிபாலன் சைவப் பிரகாச முன்பள்ளி),பா. வினோஜா (இடைக்குறிச்சி சர்வோதய பாலர்பாடசாலை), க.தனுக்சிகா (கலைவாணி முன்பள்ளி). (ஸ்ரீ-3-29)

# அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு சர்வதேச கப்பல்கள் வருகை

(கொழும்பு)

அம்பாந்தோட்டை றுஹுணு மாகரம்புர சர்வதேச துறைமுகத்திற்கு எதிர்வரும் சில தினங்களில் இரண்டு சர்வதேச கப்பல்கள் வருகை தரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவிலிருந்து 7ஆயிரத்து 500 மெற்றிக் தொன் உரத்தை ஏற்றி வரும் இக் கப்பல்களில் ஒன்று நாளை மறுதினம் றுஹுணு துறைமுகத்தை வந்தடைவதுடன் மூன்று தினங்கள் அங்கு தரித்து நிற்குமென அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இரண்டாவது கப்பல் எதிர்வரும் 23ஆம் திகதி வியாழக்கிழமை றுஹுணு மாகம்புர சர்வதேசத்துறைமுகத்திற்கு வருகை தருவதுடன் இக் கப்பல் நான்கு நாட்கள் அங்கு தரித்து நிற்குமெனவும் அறிவிக்கப் படுகிறது.

இவை மட்டுமன்றி நகரும் புத்தகசாலையாகத் தொழிற்படும் கப்பலொன்றும் ஒரு வார காலம் றுஹுணு துறைமுகத்தில் தரித்து நிற்கவுள்ளது. (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். கல்வி வலய முறைசாராக் கல்வி முன்பள்ளி போதனாசிரியர்களுக்கான ஆக்கத்திறன் பயிற்சிப் பட்டறை நல்லூர் ஸ்தான பாடசாலையில் நேற்று நடைபெற்றது. இப் பயிற்சிப் பட்டறையை வளவாளர் திருமதி ரூபராணி சத்தியமூர்த்தி நடாத்துவதையும் முறைசாரா கல்வி போதனாசிரியர் திருமதி தர்மினி சர்வேஸ்வரன் அலங்காரப் பொருள் உற்பத்தி செய்யும் செய் முறையில் ஈடுபடுவதையும் அருகில் முறைசாரா கல்வி செயற்றிட்ட அதிகாரி க.சிவானந்தன் நிற்பதையும் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# பாரம்பரிய கலைகளைப் பேணிவரும் மன்றங்களுக்கு புத்துயிரளிக்க வேண்டும்

## யாழ்.மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு

(கொழும்புத்துறை)

பாரம்பரிய கலைகள் அருகிக் கொண்டே போகின்றது. சில மன்றங்கள் இவற்றைப் பாதுகாத்து வருகின்றன. இவர்களுக்கு நாம் புத்துயிரளிக்க வேண்டும் என்று யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரத லிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்.பிரதேச கலாசார பேரவை நடத்திய கலாசார விழா நேற்றுமுன்தினம் யாழ். பிரதேச மாநாட்டு மண்டபத்தில் யாழ்.பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி சுலோஜனி குகன் தலைமையில் நடைபெற்ற போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கலா சாரப் பேரவை யாழ்.மாவட்டத்தில் ஒவ் வொரு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் செயற்பட்டு பிரதேச கலைஞர்களுக்கு புத்துயிர் கொடுத்து வருகின்றது.

ஒரு மனிதனுடைய வாழ்வில் கலையும் விஞ்ஞானமும் இரு கண்களாக மாறிவரும் உலகில் மாற்றங்களை அல்ல, வாழ்க்கையை மாற்ற வேண்டும்.ஆனால் கலாசார பண் பாட்டை மறக்கக்கூடாது. இயல்பாக வாழ விஞ்ஞானம் துணைபுரிகின்றது.

அதேபோலவே எமது கலாசாரத்தையும் பேணவேண்டிய கடமைப்பாடு எமக்கு உண்டு. கலை, கலாசாரம் என்பது நடை, உடை பாவ னையில், பேசுகிற மொழியில், உடுத்துகின்ற உடையில் எல்லாம் கலாசாரத்தை நாம் பேணவேண்டும். எந்த மொழியையும் நாம் கற்க வேண்டும்.ஆனால் இனிமையான தமிழ்மொழியை ஏனைய மொழிகளோடு சேர்த்துப் பேசுவது தவிர்க்கவேண்டும். ஆக செந்தமிழை கலப்படம் இன்றி பேச வேண் டும். யாழ்ப்பாணத் தமிழ் என்ற அடையாளம் தமிழுக்கு இருக்கிறது அதைக்காக்க வேண் டும்.

தமிழர்களுடைய கலாசாரங்களை மறந்து விடக்கூடாது.மாற்றமடைய விடக்கூடாது.

இலகுவான உணவு வகைகளை கடை களில் வாங்கிப் பழக்கப்பட்ட எம்மவர்களுக்கு எத்தனை விதமான நோய்கள் வருகின்றன. முன்னைய காலத்து ஒடியல், குரக்கன், உணவு வகைகளை மறந்துவிட்டோம். இலைக் கஞ்சி பலருக்கு தெரியாத விடயமாக மாறி வருகின்றது.

விஞ்ஞானத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதைக் காட்டிலும் கலாசாரத்தை காக்கும் பொறுப்பு எமக்கு உண்டு.பாரம்பரிய கலைகள் அருகிக் கொண்டு வருகிறது. சில மன்றங்கள் இவற்றைப் பாதுகாத்து வருகி றன.இவர்களுக்கு நாம் புத்துயிரளிக்க வேண்டும். அந்தவகையில் அனுபவ அறிவும் இரசனை உணர்வும் ஒவ்வொரு வருக்கும் அவசியம் என்றார். (ஸ்ரீ-3-51)




# பனை வளவிலிருந்து கைக்குண்டு மீட்பு

(கொழும்புத்துறை)

அல்வாய் சிறீலங்கா வித்தியாசாலைக்கு பின்புறமாகவுள்ள பனைவளவில் இருந்த கைக்குண்டு நேற்று முன்தினம் பிற்பகல் 4.40 மணிக்கு இராணுவத்தினரால் வெடிக்க வைக்கப்பட்டது.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவரு வதாவது,

மேற்படி பகுதியில் உள்ள பனை வளவி னுள் மாடு கட்டச் சென்றபோது மாமரத்திற்கு பக்கத்தில் கைக்குண்டொன்றை கண்ட கிராமவாசிகள் அல்வாய் இராணுவத்தின ருக்கு தெரியப்படுத்தியதை அடுத்து அப் பகுதி மக்களை வெளியேறச் சொல்லிவிட்டு இராணுவத்தினர் அக் கைக்குண்டை வெடிக்க வைத்தனர். (ஸ்ரீ-3-51)

# வெங்காய பயிர்ச் செய்கையில் விவசாயிகள் அதிக ஆர்வம்

(கரவெட்டி)

வடமாராட்சிப் பிரதேசங்களில் மார்கழி மாத வெங்காயப்பயிர்ச் செய்கையில் விவசா யிகள் தீவரமாக ஆர்வம் காட்டியுள்ளனர்.

பருத்தித்துறை, கரவெட்டி, வல்வெட்டித் துறைக்குட்பட்ட பிரதேசங்களில் உள்ள கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் இம் முறை வெங்காயப் பயிர்ச் செய்கையில் அதிகளவில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் அதிகமான தோட்டத் தொழி லாளிகள் வேலைவாய்ப்பைப் பெற்றுள் ளனர். ஏ-9 வீதி திறக்கப்பட்டமையால் அதிக மான வடமராட்சி சிறு வெங்காயங்கள் தென்னிலங்கைச் சந்தைகளுக்கு விற்ப னைக்கு அனுப்பி வைக்கப்படுவதாக விவ சாயிகள் தெரிவிக்கின்றனர். (ஸ்ரீ-3-24)

# முறைசாராக் கல்விப் பிரிவினரால் திறந்த பாடசாலை ஆரம்பம்

(அல்வாய்)

கரவெட்டிக் கல்விக்கோட்டத்தில் வடம ராட்சி வலய முறைசாராக் கல்விப் பிரிவின ரால் கரணவாய் வடக்கு திறந்த பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத் திறந்த பாடசாலை கரவெட்டியில் உள்ள கிராமச் சங்கம் அமைந்துள்ள பகுதி யில் அண்மையில் கட்டப்பட்ட பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறுகிறது.

இதன் சிரேஷ்ட போதனாசிரியராக கொ.குணசிங்கமும் இணைப்பாளராக இளைப்பாறிய ஆசிரியர் எஸ்.கந்தசாமியும் கடமையாற்றுகிறார்கள்.

மேலும் ஆங்கிலம், சிங்களம், அடிப்ப டைத் தமிழ் ஆகிய பாடங்கள் இங்கு கற்பிக் கப்படுகின்றன. வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் 6 மணிவரை வகுப்புக் கள் நடைபெறுகின்றன.

மேலும் மாணவர்கள் விரும்பின் மேலதிக வகுப்புக்கள் வைப்பதற்கும் ஆசிரியர்கள் இணங்கியுள்ளனர் என வடமராட்சி வலய முறைசாராக் கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி வே.இராச குமாரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

# நீண்டகாலமாக புனரமைக்கப்படாத வீதியால் பயணிப்போர் சிரமம்

(கரவெட்டி)

மந்திகை -ஆனைவிழுந்தான் சந்தி வீதி மிக நீண்ட காலமாக புனரமைக்கப்படாதுள் ளதால் போக்குவரத்தை மேற்கொள்வதில் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கு வதாக பொது மக்களும் பயணிகளும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வீதி நீண்ட காலமாக தார் போட்டு புனரமைக்கப்படாமையால் அதிகமான பகுதிகள் குன்றும் குழியுமாக காணப்படுகின் றது.

இதனூடாக பயணிக்கும் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டி களில் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

அத்துடன் இவ் வீதியூடாகவே பருத்தித் துறை - அம்பன் பேருந்து சேவைகள் இடம் பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இதனைக் கருத்திற் கொண்டு உரிய தரப் பினர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டு மென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக் கின்றனர். (ஸ்ரீ-3-24)

# மாணவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடி விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பிரதேச பாடசாலை மாண வர்களுக்காக கடந்த 14ஆம் திகதி கண் வைத்திய நிபுணர்களால் நடத்தப்பட்ட கண் வைத்திய முகாமில் பங்குபற்றி பரிசோதிக் கப்பட்ட மாணவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடி பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி மாணவர்கள் பரிசோதனை யின் பின் வழங்கப்பட்ட மருந்துச் சிட்டைகளை தாம் வசிக்கும் பிரதேசத்திலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் உடன டியாக ஒப்படைத்து இவ் இலவச மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ

# கடந்த 15 ஆண்டுகளுக்கு பின் குழந்தை வைத்திய நிபுணர் நியமனம்

(கரவெட்டி)

மந்திகை ஆதாரவைத்தியசாலைக்கு கடந்த 15 ஆண்டுகளுக்கு பின் குழந்தை வைத்திய நிபுணர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கமைய வைத்திய கலாநிதி ரி. சொரூபராஜன் கடந்தமாதம் இறுதி முதல் தமது கடமைகளை பொறுப்பேற்றுள்ளார்.

கடந்த 15 ஆண்டுகாலமாக மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட குழந்தைகள் கடும் சுகயீன முறும் வேளையில் மேலதிக சிகிச்சைக் காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் புதிய வைத்தியர் நியமிக் கப்பட்டமை பொதுமக்களுக்கு மகிழ்ச் சியை ஏற்படுத்தியுள்ளது என்று வைத்திய அத்தியட்சகர் கே.நந்தகுமார் தெரிவித்துள் ளார். (ஸ்ரீ-3-24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்.சுப்பிரமணியம் பூங்காவில் எலிபன்ட் கவுஸ் நிறுவனத்தால் அன்பளிப்பு செய்யப்பட்டு இணைக்கப்பட்டுள்ள சிறுவர் விளையாட்டு உபகரணங்களை பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா நாடாவெட்டி திறந்துவைப்பதையும் அருகில் யாழ்.மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ நிற்பதையும் விருந்தினர்கள் பூங்காவை பார்வையிடுவதையும் எலிபன்ட் கவுஸ் நிறுவனமும் யாழ். மாநகர சபையும் 5 வருட கால ஒப்பந்தத்தில் இணையும் முகமாக எலிபன்ட் கவுஸ் உதவித்தலைவர் நெய்ல் சமரசிங்க கைச்சாத்திடுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-எஸ்.கரன்)

# அரசின் தகவலை புலிகளின் தலைமைக்கு கொண்டு சென்றதால் நெருக்கடிக்குள்ளானேன்

## மனோகணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைக்கு தெரிவிக்க விரும்பிய தகவலை கொண்டு சென்றமையால் தான் நெருக்கடியில் சிக்கிக் கொள்ள நேர்ந்ததாக ஜனநாய க மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபேயின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் எழுதிய மன்னர்களை உருவாக்கும் கலை-அரசியல் தகவல் பரிமாற்றம் எனும் தலைப்பில் நூலின் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற போது அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மனோ கணேசன் இதை தெரிவித்தார்.

இவ்விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தகவல் பரிமாற்றம் குறித்து பேசும் போது தவறான தகவல் பரிமாற்றம் குறித்தும் பேச வேண்டியுள்ளது. தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து நாம் வாய் திறக்க முன்பே அது திரிபுபடுத்தப்பட்டு பத்திரிகைகளிலும் ஊடகங்களிலும் வெளியான சந்தர்ப்பங்கள் இருந்தன. தமிழ் அரசியல்வாதிகள் எதிர் நோக்கிய பிரச்சினை இது.

கொழும்பில் தமிழ் மக்கள் மனித உரிமைமீறல் பிரச்சினைகளை எதிர் கொண்ட போது நாம் அதற்கு எதிராக குரல் கொடுத்தோம். அப்போது எமக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. ரவிராஜுக்கு நடந்தது போல் எனக்கும் நடக்கும் என அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. ஆனால் நாம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு எதிராக குரல் கொடுப்பதை நிறுத்தவில்லை.

நாம் கூறுவதை மக்களுக்கு எடுத்துச் செல்வதுதான் தகவல் பரிமாற்றம். ஆனால் அதன் மூலமாகவே அரசியலில் போட்டியாளர்களின் புகழை கொலை செய்யும் நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன. நானும் அரசாங்கத்திற்காக தகவல் பரிமாற்றம் செய்யப் போய் நெருக்கடியில் சிக்கிக்கொண்ட அனுபவமும் எனக்குள்ளது.


2001ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த ஐ.தே.க. அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அளவுக்கதிகமாக நெருங்கி பேச்சு நடத்துவதாக குற்றம் சுமத்தப்பட்டது. ஆனால் 2004ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதி பதியின் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன் என்னை அழைத்து புலிகளின் தலைமைக்கு தகவல் ஒன்றைக் கொண்டு செல்லுமாறு கூறினார்.

எனக்கு புலிகளின் தலைமையுடன் நெருக்கமில்லாத போதிலும் நீங்கள் நாட்டின் ஜனாதிபதி என்பதால் அத் தகவலை கொண்டு செல்கிறேன் என நான் கூறினேன். அத்தகவல் மிகப்பெரிய விடயம் எதுவும் அல்ல. முந்தைய அரசாங்கம் முன்னெடுத்துச்சென்ற சமாதான முயற்சிகளை எமது அரசாங்கமும் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல விரும்புகிறது என்பதே அத்தகவல்.

அத் தகவலை புலிகளின் தலைவரிடம் தெரிவிப்பதற்காக நான் கிளிநொச்சிக்குச் சென்றேன். ஆனால் நான் கிளிநொச்சியில் சென்று பிரபாகரனுடன் நீச்சல் அடித்ததாக அக்காலத்தில் ஜே.வி.பி.யில் இருந்த விமல் வீரவன்ச தேர்தல் காலங்களில் கூறித்திரிந்தார். அதற்கு ஆதாரமான வீடியோ தன்னிடம் இருப்பதாகவும் அவர் கூறினார்.

நான் அப்படி அங்கு நீச்சல் அடிக்கவில்லை. எனவே அந்த வீடியோ இருந்தால் எனக்கும் காட்டுங்கள். பிரபாகரனுடன் நான் நீச்சல் தடாகத்தில் எப்படி இருக்கிறேன் என்று பார்க்க விரும்புகிறேன் என விமல் வீரவன்சவிடம் பின்னர் கேட்டேன்.

அதற்கு அவர் எல்லோரும் இறந்து விட்டார்கள் தானே என்று சமாளித்து விட்டார். ஆனால் நான் சாகவில்லை தானே. எனக்கு அதை காட்டுங்கள் என்று அவரிடம் கேட் டேன். இதுவரை அவர் தன்னிடம்



இருப்ப தாகக் கூறிய வீடியோவை வெளிப் படுத்த வில்லை.

கருத்துக்களை கருத்துக்களால் தான் எதிர்கொள்ள வேண்டும். வசனங்களை வசனங்களால் தான் எதிர்கொள்ள வேண்டும். இது தான் ஜனநாயக அரசியல் முறையாகும் என்றார். (ஸ்ரீ-2)

## ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயச்சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆசிரமத்தில் பிரதி ஞாயிற்றுக் கிழமைதோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி பூசை முடிவுற்றதும் "கண்ணன் காட்டிய வழி " எனும் விடயம் பற்றி வல்வை சிவகுரு வித்தியாசாலை அதிபர் ஆ.சிவநாதன் ஆன்மீகச் சொற்பொழிவாற்றவுள்ளார். (ஸ்ரீ-3-35)

## வாத்திய இசை நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச்சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆசிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் வாத்திய இசை நிகழ்வை நுண்கலைப்பீட விரிவுரையாளர்களான திருமதி ஜனனி நடேசமூர்த்தி, திருமதி ஜனனி செந்தூர் ஆகியோர் வழங்கவுள்ளனர். (ஸ்ரீ-3-35)

# வடக்கில் ஒரு இலட்சம் ஏக்கரில் நெற்செய்கையை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

வடக்கில் ஒரு இலட்சம் ஏக்கர் நெற் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளவும் 80 மில்லியனில் நெற்களஞ்சியங்கள் இரண்டை அமைக்கவும் அரசாங்கம் தீர்மனித்துள்ளது.

வடக்கில் பெரும் போகத்தின் போது ஒரு இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற்பயிர்ச் செய்கையை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்து அதற்கு தேவையான சகல வசதிகளையும் உரமானியங்களையும் வழங்கியுள்ளது.

பெரும் போக விளைச்சலில் கிடைக்கவிருக்கும் நெல்லை களஞ்சியப்படுத்தும் பொருட்டு இரண்டு நெற்களஞ்சியங்களை உடனடியாக அமைக்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதன்படி முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் தலா இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் பாரிய இரு களஞ்சியசாலைகளை உடனடியாக அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி. ஏ.சந்திரசிறி பணிப்புரை விடுத்துள்ளார்.

இரு களஞ்சியசாலைகளையும் துரிதமாக அமைக்கவென வடமாகாண சபை, வடக்கின் அவசர மீள் எழுச்சித் திட்டம் என்பவற்றின் ஊடாக 80 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்யவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஜனவரி மாதம் முதல் வாரத்தில் களஞ்சியசாலை அமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு மார்ச் மாதம் இறுதிக்குள் நிறைவு செய்யப்படவுள்ளதாகவும் ஆளுநர் சுட்டிக் காட்டினார். (ஸ்ரீ-2)

## படுகொலைக் குற்றச்சாட்டில் இலங்கைத் தமிழ் இளைஞன் கைது

(கொழும்பு)

கனடாவின் தலைநகர் ரொரன்ரோவை உலுப்பி கொண்டு இருக்கும் பல்கலைக்கழக மாணவன் வின்சன் டாங் (வயது -20) படுகொலையின் பிரதான சூத்திரதாரி என்று நம்பப்படும் இலங்கைத் தமிழரான நவீன் அரசரத்தினம் (வயது -27) நேற்று முன்தினம் மாலை பியர்சன் விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இங்கிருந்து புறப்பட்டு விமானத்தில் வந்திருந்த இவரை டொரன்ரோ பொலிஸார் பிடித்து விட்டனர். யோக் பல்கலைக்கழக மாணவன் வின்சன் டாங்கை கடந்த மாதம் நவம்பர் 27 ஆம் திகதி வாகனம் ஒன்றால் இடித்துக் கொன்றார் என்பது இவருக்கு எதிரான குற்றச்சாட்டு ஆகும்.

படுகொலைக்குற்றம் சாட்டப்பட்டிருக்கும் நவீன் அரசரட்ணம் நேற்று நீதிமன்றில் ஆஜராக்கப்பட்டுள்ளார். ரொரன்ரோவில் இவ்வருடம் இடம்பெற்ற 57 ஆவது படுகொலை இது ஆகும். (ஸ்ரீ-2)

## போலிக் கடவுச்சீட்டுடன் இலங்கை வந்த மூவர் கைது

போலிக் கடவுச்சீட்டின் மூலம் நாட்டிற்குள் பிரவேசிக்க முயன்ற மூன்று இலங்கையர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அபுதாபியிலிருந்து இந்த மூவரும் பயணம் செய்துள்ளதாகத் குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் சூலானந்த பெரேரா தெரிவித்தார். அவர்களது கடவுச்சீட்டுக்களைப் பரிசோதனைக்கு உட்படுத்தியபோது அவை போலியானவை எனத் தெரியவந்ததாகவும் அவர் குறிப்பிட்டார். சந்தேகநபர்களில் பெண் ஒருவரும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

ஈழத்து சிதம்பரத்தான் திருவடிக்கு
இன்று (16.12.2010) 4ஆம் நாள் உற்சவம்
(திருவெம்பாவை)

கொன்றை வேணிப் பெருமானே! குறையொன்றுமில்லை!

மானே அனைய மைக்கண் தேவி
சௌந்தராம் பிகைப்பெண் இடமருவும்
கோனே! சிதம்பர பதிக்கரசே!
கொன்றை வேணிப் பெருமானே!
தேனே! அமுதே! செங்கரும்பே!
தெவிட்டாக் கனியே! செழும் பாகே!
ஊனே சுருக்கி உயிர் பெருக்கி
உய்யும் வண்ணம் உரையாயோ!

மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்.
(ஜ- 1809)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடை, அலுவலக ஊழியர் சட்டத்தின் கீழ்

# ஊழியர்களதும் தொழில் வழங்குநர்களதும் உரித்துக்கள், கடப்பாடுகள், பொறுப்புக்கள் (1)

தொழில் சட்டங்கள் முக்கியமானதாகக் கருதப்படும் கடை, அலுவலக ஊழியர் (தொழில் ஊதியம் ஒழுங்குபடுத்தும்) சட்டம் 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க சட்டமாக அமுலுக்கு வந்தது. இதனையடுத்து 1938 ஆம் ஆண்டின் 66ஆம் இலக்க சால்புக் கட்டளைச் சட்டம் இரத்தானது. இச் சட்டமானது இதுவரை ஏறக்குறைய 10 திருத்தச் சட்டங்களாலும், 3 கட்டளைகளாலும், வர்த்தமானி ஒழுங்கு விதிகளாலும் திருத்தப்பட்டு தற்போது நடைமுறையிலுள்ளது.

**சட்டத்தின் நோக்கம்**

கடை அலுவலகம் என்பவற்றில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள ஊழியர்களுக்கு சேவை நியதி நிபந்தனைகளை வரையறுத்தல், வேலைநேரம், சம்பளங்களை நிர்ணயித்தல், சேவை வசதிகளை அளித்தல், மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கல், சுகாதார நலனோம்பு வசதிகள் அளித்தல் மற்றும் பெண் ஊழியர்களுக்கான (மகப்பேற்று) பிரசவ நன்மைகள் அளித்தல் என்பவற்றிற்கான ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது.

இச் சட்டத்தின் 68 ஆம் பிரிவில் கடை அலுவலகம் எனக் கணிக்கப்படும் இடங்கள் பற்றி வரைவிலக்கணம் கொடுக்கப்பட்டுள்ளது.இவ்விடங்களில் வேலை செய்யும் சகல தனியார் ஊழியர்களுக்கும் கடை அலுவலக ஊழியர் சட்டத்திற்கு உட்பட்டவர்களாவர்.

**வேலையில் அமர்த்தப்படுவதற்கான குறைந்த வயது**

14வயதுக்குக் குறைந்த எவரும் கடை அல்லது அலுவலகம் அல்லது தொழில் ஒன்றில் சேவையில் அமர்த்தப்படுதல் தடை செய்யப்பட்டுள்ளது. தொழில் தருநர் என்ற வகையில் அரச அலுவலகங்களை இச் சட்டம் உள்ளடக்காது.

இச்சட்டமானது தனி யார்துறை ஊழியர்களுக்கும், தொழில் தருநர்களுக்கும் மட்டும் பொருத்தமானது. மேலும் விளையாட்டு, பொழுதுபோக்கு ஒத்த நோக்கங்களுக்காக இலாப நோக்கம் அல்லாத களரிகள், சங்கங்களின் ஊழியர்களும் இச்சட்டத்திற்கு உட்படமாட்டார்கள்.

**ஊழியர்களின் உரித்துக்கள்**

***1.பொதுவான வேலை நேரங்கள்***

வார நாள் ஒன்றில் (ஒரு மணிநேர உணவு ஓய்வுக்கான இடைவேளை தவிர) எட்டு மணித்தியாலங்கள் ஆகும்.வாரத்தில் ஒரு அரைநாளில் (உணவு/ ஓய்வுநேரம் தவிர) ஐந்து மணித்தியாலங்களாகும்.

வாரமொன்றில் வேலை செய்யக் கூடிய மொத்த காலப்பகுதி 45 மணித்தியாலங்களாகும் (மேற்படி இரண்டும் சேர்ந்த காலப் பகுதி

***2.மேலதிக நேர வேலையும், கொடுப்பனவும்***

வாரமொன்றில் 45 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட வேலைநேரப் பகுதி மேலதிக நேர வேலையாகக் கருதப்படல் வேண்டும்.இக் காலப்பகுதிக்கு 1 1/2 மடங்கு ஊதியம் வழங்கப்படல் வேண்டும்.(சாதாரண மணித்தியால வேலை நேரத்துக்கான கொடுப்பனவை விட 1/2 மடங்கு கூடியது) மாதாந்த வேதனத்தை 240ஆல் பிரித்து அதனை 50வீதத்தால் அதிகரிப்பதன் மூலம் கணிக்கப்படும்.

மேலதிக நேர வேலை வாரமொன்றிற்கு ஆகக்கூடியது 12 மணித்தியாலத்துக்கு மேற்படலாகாது.

***3 .இடைவேளையும் ஓய்வும்***

ஊழியர் ஒவ்வொருவருக்கும் அவர் தொடர்ச்சியாக வேலை செய்த 4 மணித்தியாலங்ளைக் கொண்ட காலப்பகுதி முடிவில் ஓய்வுக்காக அல்லது உணவுக்காக 1/2 மணிநேர இடைவேளை அனுமதிக்கப்படல் வேண்டும். இத்தகைய 4 மணித்தியால காலப்பகுதி காலை 11 மணிக்கும் பிற்பகல் 2 மணிக்குமிடையில் அல்லது இரவு 7 மணிக்கும் இரவு 10 மணிக்கும் இடையில் வருமிடத்து ஊழியருக்கு அத்தகைய காலப்பகுதி முடிவில் 1/2 மணித்தியாலத்திற்குப் பதிலாக உணவுக்கு ஒரு மணித்தியால இடைவேளை அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

இந்த ஓய்வுக் கான அல்லது உணவுக் கான இடைவேளை தவிர வேலை நேரங்கள் தடைப்படாமல் தொடர்ச்சியாக இருத்தல் வேண்டும்.

***4. விடுமுறையும் லீவும்***

**அமைய லீவு**

ஒரு முழு வருடத்துக்கான அமைய லீவு 7 நாட்களாகும். இது சம்பளத்துடன் கூடியதாகும். வேலையில் சேர்ந்த வருடத்தில் இரண்டு மாதங்களுக்கு ஒரு நாள் லீவு வீதம் வழங்கப்படலாம். அவசிய தேவை, சுகயீனம் காரணமாக இந்த லீவ வழங்கப்படலாம்.

**வாரார்த விடுமுறை**

வாரமொன்றில் மேலதிக நேர வேலை தவிர்ந்த 28 மணித்தியாலய நேரத்துக்கு குறையாத நேரம் வேலை செய்யும் ஊழியர் ஒருவர் சம்பளத்துடன் கூடிய ஒன்றரை நாட்கள் விடுமுறைக்கு அதே வாரத்தில் அல்லது அடுத்துவரும் வாரத்தில் பெற உரித்துடையவராவார். வாரம் என்பது சனிக்கிழமை நள்ளிரவிலிருந்து அடுத்த சனிக்கிழமை நள்ளிரவு வரையுள்ள காலப் பகுதியாகும்.

இவ்விடுமுறை நாளில் வேலை செய்யும் ஊழியர் அடுத்த வார இறுதிக்குள் ஒன்றரை நாட்கள் பதில் லீவுக்கு உரித்துடையவராவார். அத்துடன் அவ் வாரத்தில் வேலை செய்யும் மேலதிக மணித்தியாலங்களுக்கு மேலதிக் நேரக் கொடுப்பனவு வழங்கப்படல் வேண்டும்.

**வருடாந்த விடுமுறை**

முழுச் சம்பளத்துடன் ஆண்டொன்றுக்கு 14 நாட்கள் வருடாந்த விடுமுறைக்கு ஊழியர்கள் உரித்துடையவர்கள். சேவைக்குச் சேர்ந்த முதல் ஆண்டில் அதற்கான உரித்து இல்லையெனினும் அவ்வாண்டில் ஏப்ரல் முதலாம் திகதிக்குமுன்னர் சேர்ந்திருந்தால் 14 நாட்களுக்கும் யூலை முதலாம் திகதிக்கு முன் சேர்ந்திருந்தால் 10 நாட்களுக்கும் ஒக்டோபர் முதலாம் திகதிக்கு பின்னர் எனின் 4 நாட்களுக்கும் இரண்டாம் ஆண்டில் உரித்துடையவராவர்.

அதன்பின் ஒவ்வொரு ஆண்டிலும் 14 நாட்கள் விடுமுறைக்கு உரித்துண்டு.

**க.கனகேஸ்வரன்**
உதவித்தொழில் ஆணையாளர்
மாவட்டத்தொழில் அலுவலகம் - யாழ்ப்பாணம்

(தொடரும்)

# சோமாலிய கொள்ளையரிடம் பிடிபட்ட இலங்கை மீனவர்கள் மாயம்

(கொழும்பு)

சோமாலிய நாட்டு கடல் கொள்ளையர்களால் இந்து சமுத்திரத்தில் வைத்து கடந்த வாரம் பிடிக்கப்பட்ட இலங்கை மீனவர்களில் குறைந்தது 12 பேர் காணாமல் போயுள்ளனர்.

காலி மாவட்டத்தின் பெந்தோட்டை கடலில் இருந்து மீன்பிடிப் படகுகள் இரண்டில் புறப்பட்டுச் சென்றவர்களே சோமாலிய கொள்ளையர்களால் இந்து சமுத்திரத்தில் வைத்து பிடிக்கப்பட்ட பின் விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.

விடுவிக்கப்பட்ட விபரத்தை இவர்கள் படகுகளின் உரிமையாளர்களுக்கு தெரியப்படுத்தி இருந்தனர்.

ஆயினும் மீனவர்கள் திரும்பிவரவே இல்லை என்று படகுகளின் உரிமையாளர்கள் மீன்பிடி அமைச்சுக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

ஒரு படகு மர்மமான முறையில் காணாமல் போயுள்ளது என்றும் இன்னொரு படகு இந்தியக் கடற்பரப்பில் ஆபத்தில் சிக்கி உள்ளதென்றும் சந்தேகிக்கப்படுகின்றது. இவற்றைக் கண்டுபிடித்து மீட்க இந்தியக் கடற்படையினரின் உதவியை அமைச்சு கோரியுள்ளது. (ஸ்ரீ-2)



வேலணை சின்னமடு றோ.க.த.க.பாடசாலையில் கல்விகற்கும் வறிய மாணவர்களுக்கு யாழ்.எயிட் நிறுவனத்தால் அண்மையில் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் யாழ்.எயிட் நிறுவனத்தின் உதவித் திட்ட அலுவலர் செல்வி வி.சுசிலா மாணவர் ஒருவருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# பூசா தடுப்பு முகாமிற்கு நல்லிணக்க ஆணைக்குழு விஜயம் செய்யவுள்ளது

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வுகள் புத்தளம் , மன்னார் மற்றும் அம்பாறை மாவட்டங்களில் எதிர்வரும் ஜனவரி மாதம் இடம்பெறவுள்ளதாக ஆணைக்குழுவின் பிரதி செயலாளர் வருண்டிசேரம் தெரிவித்துள்ளார்.

ஜனவரி மாதம் 7ஆம் திகதி புத்தளத்திலும் 8,9ஆம் திகதிகளில் மன்னாரிலும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வுகள் இடம்பெறவுள்ளன.

இதேவேளை நல்லிணக்க ஆணைக்குழுவின் அம்பாறை மாவட்ட அமர்வுகள் எதிர்வரும் 22 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளன.

இந்த ஆணைக்குழுவின் அம்பாறை மாவட்ட அமர்வுகள் ஏற்கனவே டிசம்பர் 10ஆம்திகதி முதல் 14ஆம் திகதிவரை நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.பின்னர் அம்பாறை மாவட்ட அமர்வுகள் ஜனவரி வரை ஒத்திவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வுகளை மொனராகலை அநுராதபுரம் மற்றும் பொலநறுவை மாவட்டங்களிலும் நடத்த திட்டமிட்டுள்ளதாக ஆணைக்குழுவின் உயர் அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

அம்பேபுஸ்ஸ புனர்வாழ்வு நிலையம் மற்றும் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள காலி, பூஸா தடுப்பு முகாம் ஆகியவற்றிற்கு நல்லிணக்க ஆணைக்குழு விஜயம் செய்யவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# மிதிவெடி வெடித்ததில் படுகாயமடைந்த வாலிபர் சிகிச்சை பலனின்றி மரணம்

(கொழும்பு)

மட்டக்களப்பில் கடந்த 2ஆம் திகதி வயலில் கிடந்த மிதிவெடியொன்று வெடித்ததன் காரணமாக படுகாயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த வாலிபர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

வயலில் வேலை செய்துகொண்டிருந்த போது புதையுண்டு கிடந்த மர்மப்பொருளை பரிசோதிக்கும் நோக்கில் அருகில் இருந்த மரத்தில் ஓங்கியடித்தபோது அது வெடித்துள்ளது.

குண்டுவெடிப்பின் காரணமாக அவரது ஒரு கை கழற்றியெறியப்பட்டிருந்ததுடன், உடம்பெங்கும் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது.

அருகே இருந்த வயல்களில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் மூலமாக பிரஸ்தாப வாலிபர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளார்.

பின் அங்கிருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி மரணத்தைத் தழுவிக்கொண்டுள்ளார்.

மரணமடைந்தவர் 21 வயதான பாலப்போடி புரந்தரன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மிதிவெடி அகப்பட்ட இடத்தில் இருந்து ஐநூறு மீற்றர் தூரத்துக்குள் விசேட அதிரடிப் படையினரின் முகாம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவுக்கு தமிழர்களை கொண்டு சென்ற கடத்தல்காரர்கள் மீது வழக்கு

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் 76 இலங்கைத் தமிழர்களை கனடாவுக்கு ஓசியன் லேடி கப்பல் மூலம் கொண்டு வந்தனர் என்று சந்தேகிக்கப்படுகின்ற கடத்தல் காரர்களுக்கு எதிராக எதிர்வரும் நத்தார்ப் பண்டிகைக்கு முன்பாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

இக்கப்பல் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 17 ஆம் கனேடிய கடலில் வைத்து இடைமறிக்கப்பட்டது.

இதே நேரம் தாய்லாந்தில் இருந்து கனடாவின் வன்கூவர் தீவை கடந்த ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி சன் சீ கப்பலில் 492 இலங்கையர்கள் வந்தடைந்தனர்.

இவர்களை கொண்டு வந்தனர் என்று சந்தேகிக்கப்படுகின்ற கடத்தல் காரர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படவுள்ளன.

இந்த ஆட்கடத்தல்கள் சம்பந்தமாக தாய்லாந்துப் பொலிஸாரால் கனேடிய பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அதே போல் கனடாவின் தலைநகர் ரொரன்ரோவில் வாழும் இலங்கையர் ஒருவருக்கு எதிராக கனேடிய பொலிஸார் புலனாய்வு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

# 13ஆண்டுகளாக விளக்கமறியலில் இருந்த புலி உறுப்பினர்களுக்கு சிறைத்தண்டனை

(கொழும்பு)

கடந்த 13 ஆண்டுகளாக விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஆயுதங்களை போக்குவரத்து செய்தல் மற்றும் ஆயுதங்களை வைத்திருத்தல் ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் கைதாகி 13 ஆண்டுகளாக நான்கு விடுதலைப்புலி உறுப்பினர்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வந்தனர்.

குறித்த நபர்களுக்கு தலா ஓராண்டு கால சிறைத்தண்டனை கொழும்பு உயர் நீதிமன்ற நீதவானால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக குற்றவாளிகளுக்கு தலா 5ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் யுத்த ரீதியாக தோற்கடிக்கப்பட்ட காரணத்தினால் குறைந்தபட்ச தண்டனை விதிப்பதாக நீதவான் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கையில் இணையத்தின் ஊடான கடனட்டை மோசடிகள் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இணையத்தின் ஊடான மோசடிகள் அதிகரித்துச் செல்வதாக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. உள்நாட்டு, வெளி நாட்டு கடனட்டை பாவனையாளர்களின் தரவுகளை பயன்படுத்தி பெருந் தொகையான பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான மோசடிகளில் ஈடுபட்ட பல நபர்களை ஏற்கனவே குற்றத் தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலத்திரனியல் சாதனங்கள் மற்றும் உணவுப் பொருட்களை கடனட்டைகள் மூலம் கொள்வனவு செய்து மோசடி செய்துள்ளனர்.

இணையத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல் -வாங்கல்களுக்கும் கடனட்டைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடனட்டை பாவனையாளர்கள் தங்களது தரவுகளை நுட்பமான முறையில் பேணிப் பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியமானதென குற்றத் தடுப்புப் பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-2)

# யுத்தத்தில் கைவிடப்பட்ட வீட்டுப்பாவனை பொருட்களை கையளிக்க நடவடிக்கை

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தத்தின் இறுதிக் காலத்தில் கைவிடப்பட்ட வீட்டுப் பாவனைப் பொருட்களை உரியவர்கள் பெற்றுக் கொள்ள புதிய ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் நா.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

தற்போது புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த உடையார்கட்டு வடக்கு, சுதந்திரபுரம், தேவிபுரம், வள்ளிபுரம், இரணைப் பாலை கிராம சேவையாளர் பிரிவு மக்களின் உடைமைகளே இவ்வாறு கையளிக்கப்படாமல் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

பொதுமக்கள் தமது பொருட்களின் விபரங்களைப் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபருக்கு வழங்கி அவரின் ஏற்பாட்டில் அறிவிக்கப்படும் தினங்களில் பொருட்களை எடுத்துச் செல்லலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## கல்முனை மாநகர சபை உறுப்பினர் உட்பட நால்வர் கைது

கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஒருவர் உட்பட நான்கு பேர் நேற்று முன்தினம் இரவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்முனை தனியார் பஸ் நிலைய வளாகத்திற்குள் சட்ட விரோ தமாக கடைகள் அமைத்துக் கொண்டி ருந்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மது போதையில் காணப்பட்ட இந்நபர்கள் பொலிஸா ரைத் தாக்க முயன்ற தாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# சட்டவிரோதமாக கணனி உதிரிப்பாகங்கள் விநியோகிப்போருக்கு எதிராக நடவடிக்கை

உரிய அனுமதிப்பத்திரங்களின்றி கணனி உதிரிப்பாகங்களை சட்டவிரோதமான முறையில் பயன்படுத்தி வர்த்தகத்தில் ஈடுபடுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இவர்கள் தொடர்பாக குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் ஊடாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

எந்தவொரு நிறுவனத்தினாலும் அனுமதி பத்திரங்களின்றி கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் அவற்றை கொண்டு உருவாக்கப் பட்ட கணனிகள் விநியோகிக்கப்பட்டால் அதற்கெதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இது 2003ஆம் ஆண்டு 36ஆம் இலக்க அறிவுசார் உடைமை சரத்திற்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்ட குற்றச்செயலாக கருதப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான குற்றச் செயல்கள் தொடர்பாக முறைப்பாடுகள் கிடைக் கும் பட்சத்தில் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் ஜயந்தகுல திலகவின் கீழ் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# யுனிசெப் நிறுவனத்தின் திருமலை கிளை மூடப்படவுள்ளது

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அமைப்பின் சிறுவர் நிதியம் (யுனிசெப்) இம்மாதம் 31ஆம் திகதியுடன் திருமலையிலிருந்து வெளியேறவுள்ளது.

திருமலையில் நீண்ட காலமாகச் செயற்பட்டு வந்த யுனிசெப் அமைப்பின் பணிகள் அத்துடன் நிறைவு பெற்றுவிடும்.

யுத்தம் முடிவடைந்ததனைத் தொடர்ந்து உதவி வழங்கும் நாடுகள் தமது நிதியுதவிகளை நிறுத்திக்கொண்டதே யுனிசெப் திருமலையிலிருந்து வெளியேறக் காரணம் என்று தெரிய வருகின்றது.

அதன் காரணமாக இதுவரை யுனிசெப் நிதியுதவியில் செயற்பட்டு வந்த திருமலையின் பல செயற்பாடுகளும் நிதிவளமின்றி நிறுத்தப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. (ஸ்ரீ-2)

2010.12 16

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1431 - இங்கிலாந்தின் ஆறாம் ஹென்றி பிரான்ஸ் மன்னனாக பாரிசில் முடிசூடினான்.
- 1497 - வாஸ்கொடகாமா முன்னர் பர்தலோமியூ டயஸ் சென்றடைய முடியாத தென்னாபிரிக்காவின் அட்லாண்டிக் கரையோரத்தில் உள்ள நன்னம்பிக்கை முனையை சுற்றி வந்தார்.
- 1598 - கொரிய, ஜப்பானியக் கடற்படைகளுக்கிடையே இடம்பெற்ற சமரில் கொரியா வெற்றி பெற்றது.
- 1653 - சேர் ஒலிவர் குரொமவெல் இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, அயர்லாந்து நாடுகள் அடங்கிய பொதுநலவாயத்தின் தலைவரானார்.
- 1707 - ஜப்பானின் ஃபூஜி மலை கடைசித் தடவையாக வெடித்தது.
- 1773 - அமெரிக்கப் புரட்சி: பாஸ்டன் தேநீர் கொண்டாட்டம்-அமெரிக்கர்கள் பிரித்தானிய கிழக்கிந்தியக் கம்பனியின் கப்பல்களில் ஏறி தேநீர் பெட்டிகளை பாஸ்டன் துறைமுகத்தில் எறிந்தனர்.
- 1835 - நியூயோர்க் நகரத்தில் இடம்பெற்ற பெருந்தீயில் 530 கட்டடங்கள் சேதமடைந்தன.
- 1857 - இத்தாலியின் நேப்பில்சில் இடம்பெற்ற 6.9 நிலநடுக்கம் 11ஆயிரம் பேரைக் கொன்றது.
- 1920 - சீனாவில் 8.6 ரிக்டர் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 2இலட்சம் பேர் கொல்லப்பட்டனர்.
- 1922 - போலந்து அரசுத்தலைவர் கேப்ரியல் நருடோவிச் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1925 - இலங்கை வானொலியின் வானொலி சேவை கொழும்பில் ஆரம்பம்.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியர்கள் சரவாக்கின் மிரி நகரைக் கைப்பற்றினர்.
- 1960 - ஐக்கிய அமெரிக்க விமானம் நியூயோர்க்கை அண்மிக்கும் போது மோதியதில் 134 பேர் கொல்லப்பட்டனர்.
- 1971 - பாஹ்ரேன் பிரித்தானியாவிடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1991 - கசகஸ்தான் சோவியத் ஒன்றியத்திடம் இருந்து விடுதலை பெற்றது

## பிறப்புகள்

- 1770 - லுடுவிக் ஃவான் பேத்தோவன், ஜெர்மனிய மேற்கத்திய இசை இயற்றுநர் (இ. 1827)
- 1866 - வசிலி கண்டின்ஸ்கி, ரஷ்ய ஓவியர் (இ. 1944)
- 1917 - ஆர்தர் சி.கிளார்க், ஆங்கில எழுத்தாளர்

## இறப்புகள்

- 1916 - கிரிகோறி ரஸ்புட்டீன், ரஷ்ய மதகுரு (பி. 1869)
- 1999 - ஜோசப் ஆனந்தன், தமிழ் நாடக எழுத்தாளர்.



1971-வங்காளதேச விடுதலைப் போரில் பாகிஸ்தான் இராணுவத்தினர் சரணடைந்ததன் மூலம் போர் முடிவுக்கு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி மாத இராசி பலன்கள்




(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதலாம் பாதம்)

*வளர்ச்சிப் பாதையிலேயே எந்த நேரமும் சிந்தனையைச் செலுத்தும் மேட இராசி நேயர்களே!*

எதிலும் உங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்வீர்கள். வயது செல்லச் செல்ல செல்வம் சேர்ப்பதிலேயே நாட்டம் அதிகமாக இருக்கும். சந்தர்ப்ப சூழ்நிலைகளைச் சரியாக கணக்கிட்டு, ஒவ்வொரு காரியங்களையும் நீங்கள் செய்வதால் தான் எல்லாவற்றிலும் வெற்றி பெறுகிறீர்கள். உங்கள் நட்பை பெறுவதற்கு நான் , நீ என்று போட்டி போட்டுக் கொண்டு, பலரும் முன்வருவர்.

மார்கழி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் செவ்வாய், பாக்யாதிபதி சூரியனுடன் இணைந்து சஞ்சரிப்பதால், நல்ல வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரும் மாதமாகவே கருதலாம். சொத்து சேர்க்கை ஏற்படுவதற்கான அறிகுறி தோன்றும். சொந்தங்கள் பாராட்டும் விதத்தில் ஒரு காரியத்தைச் செய்து முடிப்பீர்கள்.

குருசந்திர யோகமும், குரு மங்கல யோகமும் அமையும் விதத்தில் கிரக நிலைகள் உலா வருவதோடு, தனாதிபதி சுக்ரன் சொந்த வீட்டில் இருந்து உங்கள் இராசியை பார்ப்பதால் பணத்தேவைகள் பூர்த்தியாகும். பக்கபலமாக இருப்பவர்கள் உங்கள் பணிக்கு ஒத்துழைப்புச் செய்வார்கள். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும்.

வீடு கட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சியில் இதுவரை கவனம் செலுத்தாத நீங்கள், இப்பொழுது கவனம் செலுத்தும் விதத்தில் சில காரியங்கள் நடைபெறப் போகின்றன. இராசிநாதன் செவ்வாயுடன் ராகு இணைந்திருப்பதால், சர்ப்ப சாந்தி செய்வது சந்தோஷங்களை நிலைக்க வைக்கும்.

*பணப்புழக்கம் அதிகரிக்கும் நேரம்*

ஜனவரி முதலாம் திகதி விருச்சிக இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். அங்கிருக்கும் புதனுடன் அது இணைவதால், புத-சுக்ர யோகம் ஏற்பட்டு, பொருளாதார விருத்தியை அதிகரித்துக் கொடுக்கப்போகிறது. எனவே, பணப்புழக்கம் அதிகரிக்கும். விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் கைகூடும்.

*உயர்வு தரும் உச்ச செவ்வாயின் ஆதிக்கம்*

ஜனவரி 6 ஆம் திகதி மகர இராசியில் செவ்வாய் உச்சம் பெறப்போகிறார். இராசிநாதன் உச்சம் பெறும் இந்த நேரத்தில் உடல் நலம் சீராகும். அடுக்கடுக்காக சில நல்ல காரியங்கள் நடைபெறும். வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உடன் பிறப்புகளும் உதவிக் கரம் நீட்டுவர். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு புதிய பதவிகள் வந்து சேரலாம். தொழில் வளர்ச்சி மேலோங்கும். வேலைவாய்ப்பிற்காக விண்ணப்பித்திருந்தவர்களுக்கு நேர்முகத் தேர்வுகளால் வெற்றி கிடைக்கும்.

*பொன்னான புதனின் பெயர்ச்சி!*

ஜனவரி 7ஆம் திகதி தனுசு இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். எனவே,மாமன் , மைத்துனர்கள் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும். மங்கல நிகழ்ச்சிகள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். வீடு மாற்றம் ,இடமாற்றம் போன்றவைகள் எதிர்பார்த்த வண்ணம் அமையும். விரும்பிய காரியங்கள் விரும்பிய படியே நடைபெறும்.

இம் மாதம் விரயஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குரு,நற்பலன்களை வழங்க வியாழன் விரதமும்,குருவழிபாடும் உங்களுக்கு அவசியம் தேவை.

*பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்*

கடந்த மாதத்தை காட்டிலும் இம்மாதம் சிறப்பாக இருக்கும்.ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல் அகலும். சொத்து மற்றும் இடங்கள் உங்கள் பெயரில் வாங்கு வதற்கான வாய்ப்புகள் கைகூடி வரும். கணவன்-மனைவிக்குள் கனிவு கூடும். சுக்ர பலம் அதிகரிப்பதால் ,வாகன யோகம் உண்டு. ஆடை ,ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். மாமன் வழி ஒத்துழைப்புகள் கிடைக்கும். முருகப்பெருமான் வழிபாட்டோடு , இராகு வழிபாட்டையும் மேற்கொண்டால் முன்னேற்றம் அதிகரிக்கும்.




(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள்,ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்)

*மகிழ்ச்சியை மட்டுமே மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்ளும் இடப இராசி நேயர்களே!*

திடீர் முன்னேற்றங்களை காணபவர்கள் நீங்கள் தான். செல்வந்தர்களின் பட்டியலில் இடம் பிடிக்கும் உங்களுக்கு அரசியல் சிந்தனையும் அவ்வப்போது தலை தூக்கும். சோர்வில்லாமல் உழைக்க வேண்டும் என்று சொல்வீர்கள். 24 மணி நேரத்தில் முக்கால் வாசி நேரம் உங்கள் முன்னேற்றத்தைப் பற்றிய சிந்தனையே தலைதூக்கும். அதிர்ஷ்ட தேவதையின் அருளுக்கு பாத்திர மானவர்கள் நீங்கள் தான்.

மார்கழி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது,தனாதிபதி புதன் மாத தொடக்கத்திலேயே ,உங்கள் இராசியைப் பார்ப்பதால் பணப் புழக்கம் அதிகரிக்கும். இருந் தாலும்,அஷ்டமத்தில் அல்லவா செவ்வாய் சஞ்சரிக்கிறார். எனவே ,ஆரோக்கியத்தில் திடீர் திடீர் என பாதிப்புகள் ஏற்படு அகலலாம், *வருமுன் காப்போம்* என்ற திட்டத்தின் அடிப்படையில் நோய் வருவதற்கு அறிகுறிகள் தோன்றும் பொழுதே மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றால், விரயங்களில் இருந்து தப்பிக்கலாம்.

அகர குருவும் ,தேவ குருவும் தங்களது சொந்த வீடுகளில் சஞ்சரிப்பதால் வரவும், செலவும் சமமாகவே அமையும். இருப்பினும் ,வாழ்க்கைத் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். உடன் பிறப்புகளின் ஒத்துழைப்பு குறைந்தாலும்,மாற்றினத்தவர்கள் உங்களுக்கு ஒத்துழைப்பு செய்ய மறக்கமாட்டார்கள். செவ்வாய் ,இராகு சேர்க்கையால் சிக்கல்கள் ஏற்படாமல் இருக்க ,செவ்வாய்க்கிழமை அன்று சர்ப்ப கிரகங்களை வழிபட்டு வருவது நல்லது.

*புத-சுக்ர யோகம் செயற்படும் நேரம்!*

ஜனவரி முதலாம் திகதி விருச்சிக இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். அங்குள்ள புதனோடு,அவர் இணையும் பொழுது பூமி யோகம் உங்களுக்கு ஏற்படும். புகழ், கீர்த்தி அதிகரிக்கும். கடவுள் துணையுடன் சகல காரியங்களிலும் வெற்றி பெறுவீர்கள். சேமிப்பு உயரும். தெய்வப் பணிகளை முன்னின்று நடத்தி வைப்பீர்கள். மாமன் ,மைத்துனர் வழி ஒத்துழைப்போடு தொழில் முன்னேற்றம் காணும் நேரம் இது.

*மகரச் செவ்வாயின் ஆதிக்கம்*

7,12க்கு அதிபதியான செவ்வாய் ஜனவரி 6ஆம் திகதி மகர இராசியில் உச்சம் பெறுகிறார். எனவே,வாழ்க்கைத்துணை வழியே வரவு வந்து சேரும். எதிர்கால நலன்கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி தரும். தூர தேசத்தில் இருந்துவரும் தொலைபேசி வழித் தகவல் வரவைப் பெருக்குவதாக அமையும். பூர்வீக சொத்துக்களாலும் இலாபம் கிடைக்கும். திருமண வாய்ப்புகள் கை கூடும் இந்த நேரத்தில் பொருத்தம் பார்த்து திருமணம் செய்வது நல்லது.

*மறைந்த புதனால் நிறைந்த தன இலாபம்*

2,5க்கு அதிபதியான புதன் 8இல் மறைவதால் ,கடன் சுமை குறையும். கொடுக்கல் - வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள் குழந்தைகள் நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றிபெறும். குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். உறவினர் பகை அகலும்.

இம்மாதம் அஷ்டமஸ்தானம் வலுப்பெறுவதால் ,ஞாயிறுதோறும் சூரிய வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

## சிவல்புரி சிங்காரம்

*பெண்களுக்கான சிறப்புப்பலன்கள்*

இந்த மாதம் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகும். எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்துச் செய்வது நல்லது. குடும்ப செலவு கூடும். இருப்பினும்,ஜனவரி 6க்கு மேல் பணவரவு திருப்திகரமாக இருக்கும். கணவன்-மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. சொத்துக்கள் கையை விட்டுப்போனாலும், புதிய சொத்துக்கள் பின்னர் வாங்கும் சூழ்நிலை உருவாகும் .நந்தி வழிபாடு நலம் சேர்க்கும்.

(தொடரும்)

# வடக்கில் வெள்ள நிவாரணம் வழங்க 45 மில்லியன் ஒதுக்கீடு

## மீள்குடியேற்ற அமைச்சர் தெரிவிப்பு

வடக்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 10 ஆயிரம் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க 45 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 45 மில்லியன் ரூபா செலவில் நிவாரணப் பொதிகள் வழங்கப்படவிருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இதற்கமைய ஒரு குடும்பத்திற்கு 4ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பொருட்கள் அடங்கிய பத்தாயிரம் பொதிகள் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வழங்கப்படவுள்ளன. மீள்குடியேற்ற அமைச்சில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களில் 17 ஆயிரத்து 677 பேர் மாத்திரமே இன்னமும் முகாம்களில் தங்கியுள்ளனர். கண்ணிவெடிகள் முற்றாக அகற்றப்பட்டதும் அவர்களையும் சொந்த இடங்களில் மீள் குடியமர்த்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அதேநேரம் அண்மையில் பெய்த கடும் மழையால் மன்னார் மாவட்டம் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் 9 ஆயிரத்து 908 குடும்பங்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 5 ஆயிரத்து 724 குடும்பங்களும் யாழ்ப்பாணத்தில் ஆயிரத்து 744 குடும்பங்களும் வவுனியாவில் 109 குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தக் குடும்பங்களுக்குத் தேவையான உதவிகளை வழங்க அமைச்சு 45 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான அரிசி, கோதுமைமா, சீனி, பருப்பு, தேயிலை, பால்மா, ரின்மீன், மெழுகுதிரி, பாய், சவர்க்காரம், பிளாஸ்டிக் பாய், தண்ணீர்கலன் போன்ற பொருட்கள் அடங்கிய பொதியினை வழங்கவுள்ளோம் என்றார். (ஸ்ரீ-2)

# ரஷ்யாவிலிருந்து இராணுவத்துக்கு கவச வாகனங்கள் கொள்வனவு

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை இராணுவத்திற்கும் செயற்கை தொழில்நுட்பத்துடனான கவச வாகனங்களை கொள்வனவு செய்வது தொடர்பாக ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தை இடம்பெற்று வருவதாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்தார்.

கொழும்பு முகத்துவாரத்தில் அமைந்துள்ள ரொக் ஹவுஸ் இராணுவ முகாமின் 55 ஆவது ஆண்டு பூர்த்தி விழா நேற்று இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தலைமையில் நடைபெற்றது.இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், சர்வதேச நாடுகளிலிருந்து எவ்வித அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டாலும் இலங்கைக்கும் மீண்டும் பயங்கரவாதம் உருவாகுவதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என்றும் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு படையினர் தங்களது முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என்றும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# எய்ட்ஸ் நோய்க்கு மருந்து

எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்தும் மருந்தொன்றைக் கண்டுபிடித்துள்ளதாக ஜேர்மனியிலுள்ள மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

பேர்லின் நகரைச் சேர்ந்த இம்மருத்துவர்கள் அமெரிக்காவைச் சேர்ந்த எச்.ஐ.வி. மற்றும் இரத்தப் புற்றுநோய்க்குள்ளான நோயாளியுடன் பணியாற்றி வந்தனர். இந்நிலையில் இவ்விரு நோய்களையும் குணப்படுத்தும் மருந்தை தாம் கண்டுபிடித்துள்ளதாக அவர்கள் தெரி வித்துள்ளனர்.

எய்ட்ஸ் நோயைப் பரப்பும் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளான நோயாளியொருவர் குணப்படுத்தப்பட்டமை இதுவே முதல் தடவையாகும்.

எனினும் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானோருக்கான பொதுவான சிகிச்சையாக இதை பயன்படுத்துவதற்கு முன்னர் பல வருடகால வேலைகள் எஞ்சியிருக்கின்றன என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

குணப்படுத்தல் என்பது பலமான ஒரு வார்த்தை. ஆனால் இது உற்சாகமூட்டுவதாகவுள்ளது. இப்பெறுபேறு நம்பிக்கையளிப்பதாகவுள்ளது என ஹவார்ட் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கலாநிதி டேவிட் ஸ்காடென் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# தேவார பாராயணம்

உலக அமைதி மற்றும் ஒற்றுமைக்காக வாழும் கலை நிறுவனத்தால் ஒரே மேடையில் 11 ஆயிரம் மக்கள் இணைந்து வழங்கும் வரலாற்று சிறப்பு மிக்க தேவார பாராயணம் எதிர்வரும் 22 ஆம் திகதி மாலை 3.30 மணிக்கு மட்டக் களப்பில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் அனைவரையும் பங்குகொள்ளுமாறு வாழும் கலை நிறுவனத்தினர் கேட்டுக்கொள்கின்றனர். (ஸ்ரீ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஊர்காவற்றுறை பிரதேசத்தில் "சொண்ட்" நிறுவனத்தினால் தெரிவுசெய்யப்பட்ட 13 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவித் திட்டத்துக்கான 5ஆம் கட்ட கொடுப்பனவு அண்மையில் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் ஊர்காவற்றுறை "சொண்ட்" நிறுவன திட்ட இணைப்பாளர் பே.விமல்கிருஷ்ணா தலைமையுரையாற்றுவதையும், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் பயனாளி ஒருவருக்கு கடற்றொழிலுக்கான உபகரணம் வழங்குவதையும், ஊர்காவற்றுறை பிரதேச செயலர் தெ.கிருபைநாதன் பயனாளி ஒருவருக்கு சைக்கிள் திருத்தக் கடைக்கான உபகரணம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# வவுனியாவில் யுவதியொருவர் காணாமல் போயுள்ளார்

(கொழும்பு)

வவுனியா, குருமண்காட்டைச்சேர்ந்த யுவதியொருவர் காணாமல்போயுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் மேற்படி யுவதியின் பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை வேலைக்கு சென்ற பொழுது குறித்த யுவதி இதுவரையில் வீடு திரும்பவில்லை என்று பெற்றோர் தமது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளனர்.

குருமண்காடு பிரதேசத்தைச் சேர்ந்த ஜெயசீலன் ஜெயபிரவீனா (வயது 25) என்ற யுவதியே இவ்வாறு காணாமல் போனவர் ஆவார். இவர் வவுனியா மாவட்ட செயலகத்தின் கணக்குப் பிரிவில் உதவியாளராக கடமை புரிந்து வருகிறார்.

வழமைபோல் நேற்றுமுன்தினம் காலையும் வேலைக்குச் செல்வதற்காக அவர் புறப்பட்டுச் சென்றபோதிலும்,தொழில் புரியும் இடத்தை அவர் சேரவில்லை என்று செயலகத்தில் இருந்து தொலைபேசி மூலம் தமக்கு தகவல் கிடைத்ததாக பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர். சேமமடுவைச் சேர்ந்த இவர் பெற்றோருடன் நீண்டகாலமாக வவுனியா குருமண்காட்டில் வசித்து வருபவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# ஆசிரியையை வழிமறித்து கைப்பை அபகரிப்பு

(கொழும்புத்துறை)

அரியாலை புறுடிலேன் வீதியில் பயணம் செய்த ஆசிரியை ஒருவரின் கைப்பையை பச்சை நிற மீன்பெட்டியுடன் வந்த நபர் ஒருவர் பறித்துச் சென்றுள்ளார்.

இச்சம்பவம் குறித்து தெரிய வருவதாவது,

பாடசாலை முடித்துவிட்டு வீடுதிரும்பிக் கொண்டிருந்த நல்லூர்ப் பகுதியைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரை எதிரே வந்த மீன் வியாபாரி ஒருவர் வழிமறித்து கைப்பையைப் பறித்துச் சென்றுள்ளார். குறித்த கைப்பையினுள் சங்கிலி, காப்பு உட்பட பெறுமதியான பொருட்கள் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருடியவர் கரையோரப் பக்கமாக சென்றதாக ஆசிரியை முறைப்பாடு செய்துள்ளார்.

இதேபோன்று நல்லூர் வைமன் வீதியால் நடந்து சென்ற யுவதி ஒருவரின் கைப்பையை சைக்கிளில் வந்த சிறுவன் ஒருவன் பறித்துச் சென்றதாகத் தெரிய வருகிறது.

இது தொடர்பாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-51)

# கரவெட்டி பி.செ.பிரிவில் கிராம செயலகம்

கரவெட்டி பிரதேச செயலகத்தில் கிராம செயலகம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு ஒன்று நேற்று காலை கரணவாய் மேற்கு ஜே/349 கிராம சேவையாளர் பிரிவில் இடம்பெற்றது.

சுமார் 5இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படும் இக் கிராம செயலகம் கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் முதற் தடவையாக அமைக்கப்படவுள்ளது. (ஸ்ரீ-3-24)

# தொழிலாளர்கள் ஒன்றிணைந்து குரலெழுப்பும் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்

## உலக தொழிற்சங்க ஒன்றிய பதில் பொதுச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தொழிலாளர்கள் கூட்டாக இணைந்து கோரிக்கை விடக்கூடிய உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டுமென உலக தொழிற்சங்க ஒன்றியத்தின் சிரேஷ்ட பதில் பொதுச் செயலாளர் எச்.மஹாதேவன் தெரிவித்துள்ளார்.

அனைத்து கம்பனி தொழிலாளர் ஒன்றியத்தின் 12ஆம் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தொழிலாளர்களின் பெறுமதி இன்னமும் சரியான முறையில் வெளிப்படுத்தப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். உழைக்கும் வர்க்கத்தினரின் மிகப் பெரிய ஆயுதமாக மனிதாபிமான அடிப்படையில் தொழிலாளர் சட்டங்கள் அமைய வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, இலங்கை உழைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு கடுமையான முயற்சி எடுக்கப்பட வேண்டுமென ஜே.வி.பி.பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் மொத்த வருமானத்தில் 38 வீதமான பணம் பத்து வீதமான மக்களினால் செலவிடப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். பெருமளவு உழைப்பைப் பெற்றுக் கொண்டு சொற்பளவிலான சம்பளங்கள் வழங்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# க.பொ.த.உயர்தரப்பரீட்சை முன்னணிப் பெறுபேறுகள்

**யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை**

**கணிதப் பிரிவு**

ந.நிலுசியா- 3ஏ, சு.பிருந்தா-2பி, சி, இ.மாதுரி-பி,2சி.

சு.அபிராமி-ஏ,2பி, மா.லாவண்யா-ஏ,2பி, த.பிரதீபா-2பி,சி,சி.சர்மி-2பி,சி,சி, மெக்சிபாரதா-2பி,சி,சு.சுபாங்கி-2பி,கி,சுஜனி-2பி,சி,சி.நளினா-2பி,சி,க.கோபிகா-2பி,சி, செ.மாதினி-2பி,சி, ஐ.யோகல்யா-பி,2சி, த.தர்சிகா-பி,2சி.

**வர்த்தகப் பிரிவு**

வி.ரேணுசா-ஏ,பி,சி,இ.கிருத்திகா-3பி, நா.சங்கர்ணியா-பி,2சி,பா.ஆரணி-பி,2சி.

**கலைப் பிரிவு**

அ.பிரியங்கா-3ஏ,ஞா.அனுயா-2ஏ, பி, கு.சுகந்தினி-2ஏ,சி, அ.ஜெயரோகினி-2ஏ,சி,தி.கிருசா-ஏ,2பி,ப. தர்சிகா ஏ,2பி, ஸ்ரீ. பிரியா-ஏ, 2பி, கு.ரூபிகா-ஏ, 2பி, அ.மேரிபிரசாந்தி-ஏ, 2பி, இ.வினோசா-ஏ,2பி,இ.ஜசிகா-ஏ,2பி,க.பிருந்தா-ஏ,2பி.

**வடமராட்சி கிழக்கு அம்பன் அமெரிக்க மிசன் பாடசாலை**

க.சுமணா- 2ஏ,பி , பா.அகலிகா-2ஏ,சி, ச.சங்கீர்த்தனா - 2ஏ,சி, சி.சயந்தன்-2ஏ,சி, வே.விஜிதரன் -ஏ,பி,சி , உ.நிருஷா-ஏ,சி, எஸ், இ.மைதிலிக்கா-2பி,சி, கோ. கௌசல்யா-2பி,எஸ்,க.சுகிர்தன்-பி,2சி

**யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்**

**கலைப் பிரிவு**

மு.சங்கீதா - 2ஏ,பி, ப.கோபிகா-ஏ,பி,சி, ச.மேனுகா-3பி, செ.டனிசினி-ஏ,2சி, நா. நிசா- 2பி,சி,ந.யசோதா-3சி.

**யாழ்/வைத்தீஸ்வராக் கல்லூரி**

**உயிரியல் பிரிவு**

வீ.விஜிதா-2ஏ,பி, பா.கிருஷாந்தி -ஏ,2சி

**கலைப் பிரிவு**

வே.சதீஸ்கரன்-ஏ, 2சி, அ.சிங்கராஜா கிஷான்-ஏ,2சி, பா.பவித்திரா-ஏ,2சி, தி.நியோமி -ஏ,சி, எஸ், சி.சிந்துஜன்- 2பி,சி, மு.முகமது பௌசான்-பி, 2சி, ஸ்ரீ.நிருபா- பி, 2சி, கே.மாதுரி-பி,2சி, வி.டியூலா-பி,சி, எஸ்.

**வர்த்தகப் பிரிவு**

க.துஷாரா-பி,சி,எஸ். (ஸ்ரீ-3-35)

# வரிச் சலுகையுடன் வாகன இறக்குமதி செய்ய அரச ஊழியர்களுக்கு அனுமதி

## நேற்று முதல் அமுல்

(கொழும்பு)

வரிச்சலுகையுடன் வாகன இறக்குமதி செய்ய அரச ஊழியர்களுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

அதனடிப்படையில் 25ஆயிரம் டொலர் பெறுமதியான வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு 50 தொடக்கம் 70 வீத வரிச் சலுகை வழங்கப்படுகிறது.

அரச சேவையில் அரச தொழில் முயற்சிகளில் தொழில் புரியும் நிறைவேற்று தரம் - நிர்வாகம் - முகாமைத்துவம் மற்றும் தொழில் சார் பதவி நிலைகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுக்கே இந்தச் சலுகை வழங்கப்படுகிறது. நிபந்தனையடிப்படையில் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கும் புதிய உதிரிப்பாகங்களை பயன்படுத்தி உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் வாகனங்களை இறக்குமதி செய்யவும் அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

இந்த நடைமுறை நேற்று முதல் அமுலுக்கு வரும் விதத்தில் நிதி அமைச்சு சகல அமைச்சுக்களுக்கும் அமைச்சின் செயலாளர்களுக்கும் மாகாணசபை பிரதம செயலாளருக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளது.

1000 சீ.சீ.புதிய வாகன இறக்குமதிக்கு 50 வீத வரியும் 1600 சீ.சீ. வாகனத்துக்கு 55 வீத வரியும் 2000 சீ.சீ.வாகனத்துக்கு 60 வீத வரியும் 2600 சீ.சீ.வாகனத்துக்கு 70 வீத வரியும் அறவிடப்படும்.

அரச சேவையிலுள்ள பதவி நிலை உத்தியோகத்தர்கள் அரச சேவையில் தொடர்ந்து ஆறு வருடங்கள் சேவையில் ஈடுபட்டு வருபவர்களாக இருத்தல் வேண்டும்.

பல்கலைக்கழகங்களில் கல்விசார் பதவி நிலை உத்தியோகத்தர்களும் அரச தொழில் முயற்சி சேவையில் ஈடுபட்டுள்ள பதவி நிலை உத்தியோகத்தர்களும் 12 வருடங்கள் தொடர்ந்து பணியாற்றுபவர்களாக இருக்க வேண்டும். அரச வங்கி உத்தியோகத்தர்கள் இதில் சேர்க்கப்படவில்லை. (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷ் தொழிற்சாலையில் நிகழ்ந்த தீ விபத்தில் 22 பேர் பலி



(டாக்கா)

பங்களதேஷில் உள்ள ஒரு தொழிற்சாலையில் கடந்த 13 ஆம் திகதி நிகழ்ந்த தீ விபத்தில் 22 பேர் பலியானார்கள்.

பங்களாதேஷின் தலைநகர் டாக்காவின் புறநகர் பகுதியில் அஷூலியா தொழில் மண்டலத்தில் உள்ள ஆயத்த ஆடை தொழிற்சாலையில் மதியம் 2 மணிக்கு திடீரென தீப் பிடித்தது.

10 ஆவது மாடி என்பதால் தீயிலிருந்து தப்பிப்பது அங்கு பணியில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு கடினமாக இருந்தது. இதில் சிக்கி 22 பேர் பலியானார்கள்.

மேலும் 50 க்கும் மேற்பட்டோர் அக்கட்டத்தின் மாடியில் சிக்கி இருப்பதாகவும் தீயைக் கட்டுப்படுத்த தீயணைப்பு வீரர்கள் போராடி வருவதாகவும் அதிகாரி ஒருவர் 13 ஆம் திகதி இரவு தெரிவித்தார்.

தீப் பிடித்ததற்கான காரணம் உடனடியாகத் தெரிய வரவில்லை என தீயணைப்புத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

விபத்து நடந்த இடத்திலிருந்து சிகிச்சைக்காக கொண்டு வரப்பட்ட 2 பேர் மருத்துவமனையில் இறந்ததாக அருகில் உள்ள ஈனாம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை தாதி ஒருவர் கூறினார். (ஸ்ரீ-2)






**சீனாவின் ஷடோங்க் மாகாணத்தில் உள்ள ஒரு உணவு விடுதியில் வாடிக்கையாளர்களுக்கு வேண்டிய உணவுகளை விநியோகிக்க ரோபோ பயன்படுத்தப்பட்டு வருகிறது. இது அங்கு வரும் வாடிக்கையாளர்களை வெகுவாகக் கவர்ந்துள்ளது.**

# பிரிட்டனின் மிகப்பெரிய அணுசக்தி நீர்மூழ்கி கப்பல்

## கோலாகலமாக வெள்ளோட்டம்



பிரிட்டனின் மிகப் பெரிய அணுசக்தி நீர்மூழ்கி கப்பல் சவுத்தம்டான் கடலில் நேற்று முன்தினம் கோலாகலமாக வெள்ளோட்டம் விடப்பட்டது.

எச்.எம்.எஸ். ஆம்புஷ் எனும் இந்த அணுசக்தி நீர்மூழ்கி கப்பல் 7 ஆயிரத்து 400 தொன் எடை கொண்டது. இதில் பல்வேறு தகவல் தொழில் நுட்பங்களுடன் ரேடார் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

219 அடி ஆழத்தில் கடலில் செல்லக்கூடிய இக்கப்பலில் 93 பேரை சுமந்து கொண்டு நாள் ஒன்றுக்கு 500 மைல்கள் தூரம் செல்ல முடியும். மேலும் 38 ஏவுகணைகள் தாங்கிச் செல்லும். அத்துடன் 3 ஆயிரம் கடல் மைல்கள் தொலைவிலிருந்தே எதிரிகளின் இலக்கினை தாக்கும் திறம் கொண்டது. இந்த நீர்மூழ்கிக் கப்பலானது முற்றிலும் அணுசக்தியால் இயங்கக் கூடிய தன்மை கொண்டது.

எச். எம். எஸ். எனும் பெயர் கொண்ட இந்தக் கப்பல் லேடி ஆனிசோர் எனும் பெயரில் அதிகார பூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்டது. (ஸ்ரீ-2)

# ஒரே நேரத்தில் 8 குண்டுகளை சுடும் அதிநவீன துப்பாக்கி

## அமெ.விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

உலகில் பலவிதமான அதிநவீன துப்பாக்கிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. தற்போது 160 கிலோ மீற்றர் தூரத்தில் இலக்கை குறிபார்த்து சுட்டு அழிக்க கூடிய அதிநவீன துப்பாக்கியை அமெரிக்க விஞ்ஞானிகள் தயார் செய்துள்ளனர்.

இந்த துப்பாக்கியில் இருந்து ஒரே நேரத்தில் தொடர்ச்சியாக 8 குண்டுகளை சுட முடியும். இவை குறிப்பிட்ட இலக்கை மிகவும் துல்லியமாக பலத்த சத்தத்துடன் தாக்கும் திறன் கொண்டவை.

தற்போது அமெரிக்க போர்க் கப்பல்களில் 20 கிலோ மீற்றர் இலக்கிற்கு பாய்ந்து சென்று சுடக்கூடிய துப்பாக்கி பயன்படுத்தப்படுகிறது. இது மற்றொரு எதிரி கப்பலை தாக்கக் கூடியது.

இதை தொடர்ந்து இன்னும் 5 அல்லது 10 ஆண்டுகளில் அதாவது 2025 ஆம் ஆண்டுகளில் இந்த அதிநவீன துப்பாக்கி அமெரிக்க கப்பற் படையில் இணைக்கப்படலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வீடியோ கேம்ஸ் விளையாட்டுக்களில் பார்க்கும் இந்த அதிநவீன துப்பாக்கி விரைவில் பயன்பாட்டுக்கு வரவுள்ளது. (ஸ்ரீ-2)

# தென்கொரிய இராணுவ தளபதி இராஜினாமா



தென் கொரியாவின் இராணுவத்தளபதி ஜெனரல் ஹாவாங் யூய் பொன் தமது பதவியை இராஜினாமா செய்துள்ளார். சொத்து முதலீடு தொடர்பான நிதி முறைகேட்டில் ஈடுபட்டதாக ஊடகங்களில் செய்தி வெளியானதைத் தொடர்ந்து அவர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

வடகொரியாவிற்கும் தென்கொரியாவிற்கும் இடையிலான பதற்ற நிலை நீடித்து வரும் நிலையில் தென்கொரிய இராணுவத்தளபதி தமது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

தென் கொரியா மீது அண்மையில் வடகொரியப் படையினர் நடத்திய எறிகணை தாக்கதல்களுக்கான பொறுப்பை ஏற்று அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் அண்மையில் பதவி விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜெனரல் ஹாவாங் கடந்த ஜூன் மாதம் இராணுவத்தளபதியாக பதவி உயர்த்தப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இராணுவத் தளபதியின் இராஜினாமா அந்நாட்டின் பாதுகாப்பு படையை மேலும் பலவீனப்படுத்தும் என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எவ்வாறெனினும், தாம் குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை என இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார். சொத்து கொள்வனவு தொடர்பான சட்டங்களில் தளர்வு ஏற்படுத்தப்படும் என அறிந்து கொண்டு இராணுவத் தளபதி சொத்துக்களை கொள்வனவு செய்துள்ளதாக இராணுவத் தளபதி மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# சனி கிரகத்தின் நிலவில் பனிக்கட்டி எரிமலை

## விஞ்ஞானிகள் கண்டு பிடிப்பு

அமெரிக்காவின் நாசா விண்வெளி நிறுவனம் சனிக் கிரகத்தில் ஆய்வு நடத்த காசினி என்ற செயற்கை கோளை செலுத்தியுள்ளது. அதற்கு காசினி -ஹைஜன் மிஷன் என பெயரிடப்பட்டுள்ளது.

இந்தக் காசினி செயற்கை கோள் சனிக் கிரகத்தின் அமைப்புகளை புகைப்படம் எடுத்து அனுப்பி வருகிறது. அதில் சனிக் கிரகத் தின் மிகப் பெரிய நிலவான டைடனில் ஆயிர த்து 500 மீற்றர் உயர மலை இருப்பது தெரிய வந்தது.

டைடன் நிலவின் வெளிப்புறம் ஐஸ் கட்டியினாலான தண்ணீர் மற்றும் அமோனியா வால் ஆனது. அவை மிகக் குறைந்த வெப்ப நிலையிலேயே உருகக் கூடியது. அவ்வாறு உருகிடைனின் வெளிப்புறத்தில் படர்ந்து நிற்கிறது.

டைடன் நிலவில் உள்ள மலைகளின் இடையே தற்போது எரிமலையும் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது டைடனில் தெற்கு பகுதியில் உள்ளது.

மேலும் இது அங்குள்ள கடலில் மணற் குன்றுகளாக உள்ளன. இவற்றை சொட்ரா பாகுவா என்று அழைக்கின்றனர். டைடன் நிலவு பனிக்கட்டியால் சூழப்பட்டிருப்பதால் இந்த எரிமலையும் பனிக்கட்டி மூடிக்கிடக்கிறது. இவை காசினி செயற்கை கோளின் 3 டி காமிரா மூலம் படம் பிடிக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை புவியியல் விஞ்ஞானிகள் மாநாட்டில் பேராசிரியர் டாக்டர் கிர்க் தெரிவித்தார். (ஸ்ரீ-2)



**உலக அதிசயங்களில் ஒன்றான இத்தாலியின் பைசா சாய்ந்த கோபுரம் அந்நாட்டின் எட்டு ஆண்டு திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு அழகு படுத்தப்பட்டுள்ளது. இது விரைவில் சுற்றுலா பயணிகளின் பார்வைக்கு திறக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் பயிற்சிக் கல்லூரி மாயம்; தேடுகிறது சுகாதார அமைச்சு

(கொழும்பு)

அரசாங்க தாதியர்களுக்கு ஆங்கிலப் பாடநெறியை (IELTS) கற்பிப்பதற்காக சுகாதார அமைச்சினால் ஒப்பந்தம் செய்யப்பட்ட தனியார் ஆங்கிலக் கல்வி நிறுவனத்தை தேடும் முயற்சி பயனளிக்கவில்லை என சுகாதார அமைச்சின் பேச்சாளர் நேற்றுத் தெரிவித்தார்.

உயர் சம்பளத்துடனான வேலைக்காக இவர்களை அமெரிக்காவுக்கு அனுப்பும் நோக்கில் வழங்கப்பட்ட இந்த ஆங்கிலக் கல்விக்கு வருடம் ஒன்றுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் அறவிடப்பட்டது.

2009 ஆம் ஆண்டு சுகாதார அமைச்சு நேர்முகப் பரீட்சை மூலம் 125 தாதியரைத் தெரிவுசெய்தது.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்திற்கு வேலைக்கு அனுப்புவதற்காக இந்த (IELTS) அடிப்படைத்தகுதியாக இருந்தது.

இந்த (IELTS) பாடநெறிக்காக அமைச்சு அதிகாரிகள் நாரஹென்பிட்டியில் ஒரு தனியார் நிறுவனத்தை தெரிந்தெடுத்தனர். இதற்காக தாதியர் ஒருவரிடமிருந்து தலா ஒரு இலட்சம் ரூபாய் கட்டணம் அறவிடப்பட்டது.

சில மாதங்களின் பின் பாடநெறி இடைநிறுத்தப்பட்டதால் தாதியர்கள் செய்த முறைப்பாட்டின்பேரில் விசாரித்தபோது நாரஹென்பிட்டியில் இருந்த மேற்படி கல்விநிறுவனம் மூடப்பட்டு விட்டதும், அதன் உத்தியோகத்தர்கள் தலை மறைவாகிப்போனது தெரிய வந்தது.

இதனால் ஒரு தாதியர் கூட அமெரிக்கா செல்ல முடியவில்லை. இப்போது தாதியரை வெளிநாட்டுக்கு அனுப்பும் திட்டமும் கைவிடப்பட்டுள்ளது.

அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகளுக்கு இந்த ஊழலில் பங்கிருப்பது விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாக அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ச-5)

## பொது மக்களின் பார்வைக்கு ஒராங்குட்டான்

தெஹிவளை மிருகக்காட்சிச் சாலையில் சென்ற மாத முற்பகுதியில் பிறந்த ஒராங்குட்டான்குட்டி இன்று 10 மணிக்குபொது மக்களுக்குக் காட்டப்படவுள்ளதாக தேசிய வனவிலங்குப் பூங்கா அறிவித்துள்ளது.

இது தனியான பாதுகாப்பாகப் பிரித்து வைக்கப்பட்டது. இதுவரை தகப்பன் ஒராங்குட்டானையும் நெருங்கவிடவில்லை.

புதிய ஒராங்குட்டானுக்கு பொருத்தமான பெயர் சூட்டுவதற்கு நலன்விரும்பிகள் தாம் விரும்பும் பெயர்களை எழுதி ஆலோசனைப் பெட்டியில் போட முடியும். (ச-5)

# விஷ்ணுவின் விரதங்களில் மிகச்சிறந்த வைகுண்ட ஏகாதசி விரதம்



காத்தற் கடவுளாகிய ஸ்ரீ மகா விஷ்ணுவைக் குறித்து அனுஷ்டிக்கப்படும் விரதங்களில் மிகச் சிறந்த விரதம் வைகுண்ட ஏகாதசி விரதமாகும். இதன் மகிமையும் மகத்துவமும் சொல்லில் அடங்காது. கங்கையை விடச் சிறந்த தீர்த்தமும் இல்லை ; மகா விஷ்ணுவை விடச் சிறந்த கடவுளும் இல்லை; காயத்திரியை விட உயர்ந்த மந்திரமும் இல்லை என்று இவ்விரதம் பற்றிய நம் முன் னோர் கூற்று இங்கே குறிப்பிடத்தக்கது.

வைகுண்ட ஏகாதசி விரதத்தை சுவர்க்க வாயில் ஏகாதசி விரதம் எனவும் அழைப்பதுண்டு. ஏனென்றால் இந்த விரதத்தை முறையாக அனுஷ்டித்தால் முத்திப்பேறு நிச்சயம் கிடைக்கும் என்பது மூத்தோர் நம்பிக்கை.

மார்கழி மாதம் பிறந்து விட்டால் கூடவே விரதங்களும் வர ஆரம்பித்து விடும். திருவெம்பாவை, திருப்பாவை, திருவாதிரை என்று அடுக்கடுக்காய் புண்ணிய தினங்கள் இந்த மார்கழியிலேயே வருகின்றன. ஒவ்வொரு பட்சத்துக்கும் அமாவாசைக்குப் பின்னர் வரும் பதினொராம் நாள்; பூரணைக்குப் பின்னர் வரும் பதினொராம் நாள் என ஓர் ஆண்டிலே இருபத்து நான்கு ஏகாதசிகளுடன் மேலதிகமாக ஓர் ஏகாதசியும் சேர்ந்து இருபத்தைந்து ஏகாதசிகள் உண்டு.

மார்கழி மாதத்துத் தேய்பிறையில் தான் ஏகாதசி தோன்றியது. மார்கழி மாத வளர்பிறையை ஏகாதசியை மோட்ச ஏகாதசி என்றும் வைகுண்ட ஏகாதசி என்றும் அழைப்பர். ஏகாதசி விரதம் அனுஷ்டிக்க விரும்புவோர் சுவர்க்கவாயில் ஏகாதசியிலிருந்தே விரதம் ஆரம்பிக்க வேண்டும். ஏகாதசி விரதநாளில் தசமியின் தொடர்பு இருக்கவே கூடாது.

காலையில் தசமி இருந்தால் துவாதசியில் விரதம் இருந்து திரயோதசியில் பாறணை பண்ணலாம். காலையில் ஏகாதசியும் நடுவில் துவாதசியும் இறுதியில் திரயோதசியும் வருவது மிகமிக விசேடமானது.

ஏகாதசி நாளில் காலையில் தசமியிருந்தால் அதனை ஸ்மார்த்த ஏகாதசி என்றும் மறுநாள் வைணவ ஏகாதசி எனவும் கொள்ளப்படும். ஆனால் ஏகாதசி விரதத்துக்கு வைணவ ஏகாதசியையே எடுக்கவேண்டும். பிதிர்க்காரியம் செய்ய வேண்டுமானால் ஸ்மார்த்த ஏகாதசியில் செய்யலாம்.

தங்கள் தங்கள் வீடுகளிலிருந்து கொண்டே வைகுண்ட ஏகாதசி விரதம் இருக்க விரும்புபவர்கள் பூசையறையிலேயே தானியத்தைப் பரப்பி அதிலே தாமரைப்பூவை வரைந்து சந்தணப் பிம்பத்தில் ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீ மகாவிஷ்ணுவைப் பூர்வாங்க பூசையுடன் சங்கற்பம் செய்து ஆவாஹனம் பண்ணி விரதம் மேற்கொள்ளலாம்.

அன்று முழுநாளும் எதுவுமே உண்ணாமல் பட்டினியாக இருந்து இரவு கண் விழித்து மகா விஷ்ணுவுக்குரிய பாடல்களைப் பாடி நாராயணன் தோத்திரங்களைப் பாராயணம் செய்து அடுத்த நாள் காலை 8 மணிக்குள் பாராணை பண்ணலாம்.

இந்த விரதப் பாறணையிலே அகத்திக் கீரையும் நெல்லிக்காயும் சேர்க்கப்பட வேண்டும். மேலும் இது தொடர்ந்து 11 வருடங்கள் நோக்கப்பட வேண்டும் என்றும் கூறப்படுகிறது.

ஆகையால் சுவர்க்க வாயில் ஏகாதசி விரத்தை முறையாக அனுஷ்டித்து எம்பெருமான் ஸ்ரீ விஷ்ணுவின் கிருபா கடாட்சம் பெற்று சதுர்வித புருடார்த்தங்களை அடைந்து உய்தி பெறுவோமாக.

சிவநெறி கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்

# அன்பு மதம்

திரு இராமமூர்த்தி என்பவர் பாளையம் கோட்டையில் இருந்த போது அவரின் மனைவி பகவான் பாபாவைத் தரிசிக்கும் பொருட்டு புட்டபர்த்திக்குச் சென்றிருந்தார். அவளிடம்-உனது கணவனை ஜனனதின தரிசனம் பெறும் பொருட்டு உடனடியாக வரச்சொல் என்றார். சுவாமி கூறியது போல இராமமூர்த்தியும் சுவாமியிடம் தரிசனம் பெறும் பொருட்டு புட்டபர்த்திக்கு வந்து தடாகம் ஒன்றில் நீராடச் சென்றார். சென்ற இடத்தில் தவறி ஆழமான பகுதிக்குள் விழுந்து வெளியில் வரமுடியாதவாறு தத்தளித்துக் கொண்டிருந்தார். அதேசமயம் சுவாமிக்கருகில் இருந்த இராமமூர்த்தியின் மைத்துனர் இராதா கிருஷ்ணனைப் பார்த்து, உனது மைத்துனர் நீச்சல் பழகிக் கொண்டிருக்கிறார். நான்கு பேரைக் கூட்டிச்சென்று அவனைக் காப்பாற்றி அழைத்துவா என்றார் சுவாமி.

அனைவரும் கரையேறி பிரசாந்தி நிலையத்தில் சுவாமியை தரிசித்தபோது , சுவாமி ''பார்த்தாயா இராமமூர்த்தி'' உனக்கு ஜலகண்டம். நீஇருந்த பாளையங் கோட்டைக்கு வந்து உன்னைக் காப்பாற்றுவதைவிட இங்கே அழைத்து வந்து காப்பாற்றுவது எளிது. அத னால் தான் உனது மனைவியிடம் உன்னை உடனடியாக புட்டபர்த்திக்கு வரச் சொன்னேன் என்றார்.

சுவாமி அருளுகின்றார்! பார்வையற்றவர்கள் யானையைப் பார்த்து செவியைச் சுளகு என்றும் காலைத் தூண் என்றும் தமக்குள் கருதியதைப் போன்று தமக்குத் தமக்கு என்று ஒவ்வொரு மதத்தையும் வரைந்து இதுவே உண்மையான மதம், மற்றயவை பித்தலாட்டம் என்று பறை சாற்றுகிறார்கள். மொத்தத்தில் இறைவன் எல்லா மதங்களு க்கும் உரியவர், எல்லா நா



மத்தையும் கொண்டவர் என்று உணருவார் இல்லை. எல்லா மதங்களின் தத்துவங்களையும் உள்ளடக்கியவர் இறைவன்.

அப்படியான இறைவனின் மதமே அன்பு மதம்.

நீங்கள் பார்க்கத்தான் போகின்றீர்கள். குறுகியகாலத்துக்குள் இறைவனின் தன்மையை பார்க்க முடியாத பார்வையற்றவர்கள் கூட சுவாமிதான் கடவுள் என்று பிரகடனப்படுத்துவார்கள் என அருளுகிறார்.

ஜெய் சாய்ராம் யாதவன்

காலொரு பாவி கழுத்து ஒரு மாபாவி.
கோலியிழுக்க கொடும்பாவி வெட்டினனோ.
– நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# குழையைக் காட்டி ஆட்டை கூட்டிச் செல்லும் கலாசாரம்

தமக்குப் பின்னால் வரமறுக்கின்ற ஆடுகளுக்குக் குழையைக் காட்டி அதனைக் கூட்டிச் செல்லும் வழக்கம் ஒன்று நம் ஊர்களில் உண்டு.

குழைக்கு ஆசைப்பட்ட ஆடுகள் அழைப்பவர் யாரென்று தெரியாமல்– குழை இன்னதென்று அறியாமல் பின்னால் செல்லும்.

ஆடு குழையைச் சாப்பிட எத்தனிக்கும்போது குழையை இழுத்துக் கொள்வது ஆட்டைக் கூட்டிச்செல்பவரின் நுட்பமாக இருக்கும். எனினும் சில ஆடுகள் நிலைமையை உணர்ந்துகொண்டு குழைக்குப் பின்னால் செல்ல மறுக்கும்.

இச் சந்தர்ப்பத்தில் ஆட்டுக்குக் குழையைக் காட்டியவர் சற்று இறங்கி குழையை ஆட்டுக்குச் சாப்பிடக் கொடுப்பார்.

குழை சாப்பிடும் நேரத்தில் குழையைக் கையில் எடுத்து மீண்டும் அழைத்துச் செல்ல முற்பட, அந்த ஆடோ சாப்பிட்ட குழையின் தன்மையை உணர்ந்து செயற்படும்.

குழையைக் காட்டி ஆட்டைக் கூட்டிச் செல்பவர் சில வேளை ஆட்டை வெட்டலாம் அல்லது தான் விரும்பும் புதையலை எடுக்கப் பலி கொடுக்கலாம். சில வேளை கட்டி வளர்க்கலாம். பாலும் கறக்கலாம். இதில் எது நடக்கும் என்று தெரியாது. ஆனாலும் குழையைக் காட்டுபவர்களின் சூழ்ச்சியில் பலவீனமான ஆடுகளே மாட்டுப்பட்டு வதைபடும்.

இதனால் பலமான ஆடுகள் கூடப் பாதிக்கப்படும். இவை நடந்தால் ஆட்டினம் அல்லல் படுவது தவிர்க்கமுடியாததே.

குழையைக் காட்டி ஆட்டைக் கூட்டிச்செல்லும் கலாசாரம் போன்று மனிதனை மனிதன் ஏமாற்றும் நாடகமும் இவ்வுலகில் நடக்கின்றன.

இதனாலேயே, யேசுபிரான் நல்ல மேய்ப்பராக இருந்தார். ஆட்டினத்தைப் பாதுகாக்க எங்ஙனம் மேய்ப்பர் அவசியமோ, அதுபோல பாதிக்கப்பட்ட மக்களைக் காப்பாற்றுவதற்கும் நல்ல மேய்ப்பர் அவசியம்.

இந்தத் தேவையை தமிழினம் நன்கு உணர்ந்துள்ளது. அரசினால் காட்டப்படும் குழையை கண்டவுடன் பின்னால் செல்வதை விடுத்து, காட்டப்படும் குழையின் தன்மை, குழையைக் காட்டுபவரின் சிந்தனை என்பன பற்றி ஆராய்ந்து செயற்பட வேண்டும்.

இல்லை என்றால் கழுத்தில் கத்தி விழுவது தவிர்க்கமுடியாமல் போகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்டோஸ் எக்ஸ்பீ, விஸ்டா இயக்கத் தொகுப்புகளுக்கான ரகசிய டீப்ஸ்

விண்டோஸ் எக்ஸ்பி மற்றும் விஸ்டா இயக்கத் தொகுப்புகளைப் பயன்படுத்து வோருக்கு சில ரகசிய ட்யூனிங் டிப்ஸ் இங்கு தரப்படுகிறன. இவை நம் இயக்க வேகத் தினை அதிகப்படுத்துவதுடன் நம் செயற் பாட்டிலும் சுவாரஸ்யத்தை தரும். நேரம் மிச்சம், திறன் அதிகரிப்பு, விண்டோஸ் தோற்ற மேம்பாடு ஆகியவை இந்த டிப்ஸ்களின் நோக்கம். இவற்றால் உங்கள் கணனிக்கு எந்தக் கெடுதலும் ஏற்படாது என்றாலும் உங்கள் முக்கியமான பைல் களுக்கு பக் அப் எடுத்து வைத்துக் கொண்டு இந்த டிப்ஸ்களை இயக்கிப் பார்க்கவும். இந்த டிப்ஸ்களில் கொண்ட்ரோல் பனல் குறிக்கும் குறிப்புகள் உங்கள் கணனியில் கொண்ட்ரோல் பனல் கிளாசிக் வியூவில் இருப்பதாக எடுத்துக்கொண்டு தரப்படு கின்றன. ஸ்டார்ட் மெனு கிளிக் செய்து கொண்ட்ரோல் பனல் சென்று, இடது மேலாக உள்ள ஒரு லிங்க்கில் கிளிக் செய் தால், கிளாசிக் வியூவிற்கு மாறிக் கொள் ளலாம்.

♦ *டாஸ்க் பார் ஜட்டம் அனைத்தையும் மொத்தமாக மூட (எக்ஸ்பி):*

டாஸ்க்பாரில் ஒன்றுக்கு மேற்பட்ட ஜட்டங்களையும் போல்டர்களையும் வைத் திருக்கிறீர்களா? இவை அனைத்தையும் மொத்தமாக ஒரே கிளிக்கில் மூடலாம். கொண்ட்ரோல் கீயை அழுத்திக் கொண்டு, ஒவ்வொரு ஜட்டமாக, டபுள் கிளிக் செய் திடவும். பின்னர்,ஏதேனும் ஒன்றில் ரைட் கிளிக் செய்து எழுந்து வரும் மெனுவில் குளோஸ் குரூப் (Close Grup ) என்பதில் கிளிக் செய்திடவும்.

♦ *சிஸ்டம் ரெஸ்டோர் இடத்தைப் பெற (எக்ஸ்பி):*

உங்கள் ஹார்ட் டிஸ்க்கில் இடம் குறை வாக உள்ளது என்ற எச்சரிக்கைச் செய்தி வருகிறதா? எந்த ட்ரைவ் சென்று , எப்படிப் பட்ட பைல்களை நீக்கி இடம் மீட்பது என்று குழப்பமா? சிஸ்டம் ரெஸ்டோர் வசதிக்கென உள்ள இடத்தைக் குறைத்து உங்கள் ஹார்ட் டிஸ்க்கில் இடப் பிரச்சினையை தற்காலிகமாக சமாளிக்கலாம். ஸ்டார்ட் கொண்ட்ரோல் பனல் சென்று, சிஸ்டம் ஐகனில் கிளிக் செய்திடவும். கிடைக்கும் விண்டோவில் ரெஸ்டோர் டேப்பில் கிளிக் செய்திடவும். அதில் உள்ள ஸ்லைடரைப் பயன்படுத்தி, எவ்வளவு ஹார்ட் டிஸ்க் இடத்தை மீட்கலாம் என்று பார்க்கவும். அடிக்கடி ஹாட் டிஸ்கில் உள்ள பைல்களுக்கு பக் அப் எடுக்கும் பழக்கம் உள்ளவராக இருந்தால் சிஸ்டம் ரெஸ்டோர் உங்களுக்குத் தேவை இல்லையே! எனவே இந்த வசதியை மொத்தமாக மூடிவிடலாம். இதற்கென ஒதுக்கப்பட்ட மொத்த இடமும் மிச்சமாகும்.


♦ *டாஸ்க் பாரில் வெப் ஷோர்கட் (விஸ்டா):*

இணையத்தளங்களை வேகமாகத் திறக்க, டாஸ்க்பாரில் உள்ள காலி இடத்தில், ரைட் கிளிக் செய்திடவும். எழுந்துவரும் மெனுவில் Tool bars என்பதைத் தேர்ந்தெடுக் கவும். அதில் உள்ள அட்ரஸ் ஒப்ஷனில் கிளிக் செய்தி டவும்.இங்கு உங்கள் இணையத் தள முகவரி யினை டைப் செய் திடவும். விண்டோஸ் இப்போது அந்த இணை யத்தளத்தினை, உங்கள் பிரவுசரைத் திறந்து இயக்கிக் காட்டும்.

♦ *ரீசைக்கிள் பின்னைத் தாண்ட :*

அழிக்கப்படும் பைல்கள் ரீசைக் கிள் பின்னில் சென்று, அங்கு தொடர்ந்து இடத்தைக் கொண்டி ருக் கும்.இதனால் ஹார்ட் டிஸ்க் இடம் குறையலாம். எனவே ஒரு பைல் அறவே நீக்கப்பட வேண்டும். அது ரீசைக்கிள் பின்னுக்குச் செல்லக் கூடாது என எண்ணினால், ஷிப்ட் அழுத்தி டிலீட் கீயை அழுத்தி, அந்த பைலை முற்றிலுமாக நீக்க வும்.

(தொடரும்)



# சேவ் செய்யாத ஒபீஸ் பைலை பெறும் வழி!

எம்.எஸ். ஒபீஸ் தொகுப்பில் , ஏதேனும் ஒரு எடுத்துக்காட்டாக வேர்ட், எக்ஸெல், தொகுப்பினை இயக்கி அதில் புதியதாக ஒரு பைலை உருவாக்குகிறீர்கள். நம்மில் பலர் , அந்த முழு பைலும் முடிந்த பின்னர் தான், அதற்கு பெயர் கொடுத்து சேவ் செய்திடு வோம்.

முதலிலேயே சேவ் செய்து பெயர் கொடுத் தாலும் பின்னர் பைலின் பெரும் பகுதியினை முடித்து இறுதியில்தான் சேவ் செய்து விடு வோம்.

ஒருவேளை, என்ன, பல வேளைகளில், இதனை தொடக்கத்திலிருந்தே சேவ் செய் யாமல் மூடிவிடுவோம். அவசரமாக கணனியை மூடி விட்டுச்செல்லவேண்டும் என்ற சூழ்நிலையில் பலர் என்ன ஒப்சன் கேட்கப்படுகிறது என்று அறியாமலேயே, படக் என பைலை சேவ் செய்யாமல் மூடிவிட ஒப்சன் கிளிக் செய்துவிடுவார்கள். அப்புறம் அடடா தவறு செய்துவிட்டோமே என்று எப் படிப் பைலை பெறுவது என்று விழிப்பார்கள். வழி இல்லை என்ற முடிவுக்கு வந்தால், மீண்டும் அந்தப்பைலை உருவாக்குவார் கள்.

இவர்களுக்காகவே எம்.எஸ். ஒபீஸில் 2010 தொகுப்பில்(Auto Recover) என்ற ஒரு வசதி உள்ளது. இந்த வசதியை சேவ் செய்யப்படாத பைல்களையும் சேவ் செய்தி டும் வகையில் செட் செய்திடலாம்.அது இந்த வசதியில் ஒரு போனஸ் வசதியாகும். இந்த மந்திரத்தை அமைத்து செயல்படுத்திட, File டேப் கிளிக் செய்து, அதில் Options என்னும் பிரிவினை தேர்ந்தெடுக்கவும் . ஒப்ஷன் டயலொக்ஸ் பொக்ஸ் கிடைத்தவுடன், இடது பக்கம் உள்ள Save பிரிவை தேர்ந்தெடுக்க வும். வலது பக்கம் Save Last Auto Saved Version if I Closed Without Saving என்று இருப்பதனை செக் செய்திடவும். பின்னர், ஓகே கிளிக் செய்திடவும் . இனி மேல், நீங்கள் சேவ் செய்திடாத பைலையும் மீண்டும் பெற்றுப் பயன்படுத்தலாம். சிறிது நேரம் பொறுங்கள், எப்படி சேவ் செய்யாத பைலை மீட்டுப்பெறுவது என்று சொல்ல வில்லையே! File டேப் செல்லவும். இந்த டேப்பில் Resent என்பதைத் தேர்ந்தெடுக் கவும். இதனடியில் கிடைக்கும் தகவல்களில் , கீழாக வலது மூலையில்,Recover Un Saved Documents என்று ஒரு பட்டன் இருப்பதைக் காணலாம். இந்த பட்டன், உங்களை புரோக்கிராம் தானாக,நீங்கள் சேவ் செய்யாத பைலை சேவ் செய்திட்ட இடத்திற்கு எடுத்துச்செல்லும். இங்கே இத்த கைய பைல்கள் அனைத்தும் இருக்கும். உங்களுக்கு அப்போது எந்த பைல் வேண்டு மோ, அதனைக் கிளிக் செய்து பின்னர் Open என்பதில் கிளிக் செய்திடவும். பைல் திறக்கப்படும்.இப்போதாவது ஞாபகமாக சேவ் செய்திடவும்.






# பீசி ஹவுஸ் முதன்முதலாக டெல்வோஸ்ரோ கணனியை யாழில் அறிமுகம் செய்கிறது



இலங்கையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உபகரணங்களையும் சேவைகளையும் வழங்கிவரும் முன்னணி நிறுவனமாகிய பீசி ஹவுஸ் அண்மையில் வடமாகாணத்தில் டெல்வோஸ்ரோ 320 எனும் புதிய தொழில்நுட்பத்தை அறி முகம் செய்து வைத்துள்ளது.

இத் தொழில் நுட்பம் இதற்கு முன்னர் எவராலும் வட மாகாணப் பிரதேசத்தில் அறிமுகம் செய்யப்பட்டிருக்கப்படாததுடன் நீண்டகாலமாக பாவனையாளர்கள் இதற் காகக் காத்திருக்கிறார்கள் . All in Ones (AiOs) என்பது உலக டெஸ்ரொப் கணனிச் (Destop Computer) சந்தை யில் அண்மையில் தனியான ஒரு இடத் தைப் பிடித்துள்ளது.

இதிலுள்ள வசதிகள் அழகிய தோற் றம், செயற்பாடுகளைச் சுருக்காது இடத்தை மீதப்படுத்தியுள்ளமை போன்ற வையே இதற்கான பிரதான காரணங் களாகும்.

AiOs ஒரு Destop கணனியினதும் நோட்புக் கணனியினதும் சேர்மானமாகும். அதாவது வழமையான கணனித் தொகுதி யின் சிஸ்டமும் (Systrem/cpu)LCD மொனிற்றரும் ஒன்றாக இணைக்கப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனால் டெஸ்க் ரொப் கணனியின் பெரிய திரை வசதியை யும் நோட்புக் கணனியின் மின்சாரத்தை மீதப்படுத்துதல், இடத்தை மீதப்படுத்துதல் போன்ற அனுகூலங்களையும் கொண் டுள்ளது.

பீசி ஹவுஸ் டெல் வோஸ்ரோ 320 (Dell Vostro 320) AiOs கணனியை அறிமுகம் செய்துள்ளது. இதில் intel Core TM2 Duo E7500(2.93Ghz) புரொசசர், 2GB DDRII RAM, onboard GMAX4500 கிராபிக்ஸ், 320 GB SATA HDD,Supper multi DVD Burner, 19"LCD திரை . 1400x900 பிக்சல் reso- lution.2.0 chanel HD audio. 1394Port,Card Reader. Wi-fi வசதி என்பவற்றுடன் ஒரிஜினல் விண்டோஸ் 7 பணிமுறைமை Operating System நிறுவப்பட்டுள்ளதுடன் 3 வருட முழு உத்தர வாதமும் கொண்டுள்ளது. பீசி ஹவுசின் யாழப்பாணக் கிளை இலக்கம் 01 k ஸ்ரான்லி வீதியில் கடந்த ஏழு வருடங் களுக்கும் மேலாக சிறப்பாக இயங்கி வருகிறது.

இது தொடர்ச்சியாக வடமாகாண சமூகத்தினருக்கு தகவல் தொழில்நுட்பத் துறையில் தனது பங்களிப்பை சிறப்பாக ஆற்றிவருகிறது. போர்ச்சூழல் நிலவிய காலங்களிலும் அது தனது பணியைச் சிறப்புற வழங்கியுள்ளது.

இக்கிளை தானும் வளர்ச்சியடைந்த அதே வேளை புதிய உபகரணங்களையும் சேவைகளையும் காலத்திற்குக் காலம் அறிமுகம் செய்து வந்திருக்கின்றது. பீசி ஹவுஸ் தற்பொழுது வரையறுக்கப்பட்ட பொதுமக்கள் கம்பனியாக (Public Limited Company) அடையாளப்படுத்தப் பட்டு கொழும்பு பங்குச் சந்தையில் பட்டிய லிடப்பட்டுள்ளது.

குடும்ப சொத்துரிமை வியாபாரமாக இருந்த பீசி ஹவுஸ் பொதுமக்கள் கம்ப னியாக மாற்றப்பட்டமை அது இலங்கை யில் தகவல் தொடர்பாடல் துறையினை உயர்நிலை அடையச் செய்தல் என்ற தூர நோக்கினையே பிரதிபலிக்கின்றது.

1997 இல் ஆரம்பிக்கப்பட்ட பீசி ஹவுஸ் 2000ஆம் ஆண்டில் வரைய றுக்கப்பட்ட பொதுமக்கள் கம்பனியாகச் செயற்பட ஆரம்பித்துள்ளது. இதன் நிர்வாக இயக்குநர்களாக S.H.M. றிஷான், மங்கலபொயகொட, சரத் விக்கிரமநாயக்கே, மொடராகேதிலகசிறி, சாந்திகுமார் நடராஜா, குவேரா டீ செய்சா, திருமதி சர்மிலா றிசான் ஆகியோர் உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண கலாசார விழா ஜனவரியில் யாழ்ப்பாணத்தில்!

(திருகோணமலை)

வடக்கு மாகாண கலாசார விழாவை எதிர்வரும் ஜனவரி மாத இறுதியில் யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, 2011 ஆம் ஆண்டுக்கான வடக்கு மாகாண கலாசார விழா நடத்துவதற்கான கலந்துரையாடல் நேற்று வடக்கு மாகாண ஆளுநருக்கும், வடக்கு மாகாண கலாசாரத் திணைக்கள அதிகாரிகளுக்குமிடையில் நடைபெற்றது.

இதில் வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் மற்றும் வடக்கு மாகாண கலாசாரத் திணைக்கள அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இதன் போது 2011 ஆம் ஆண்டுக்கான வடக்கு மாகாணக் கலாசார விழாவை எதிர்வரும் ஜனவரி மாத இறுதியில் யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜென்ரல் ஜி.ஏ.சந்திரசிறி அறிவுறுத்தினார்.

இவ் விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொள்ளுமாறும் அவர் அறிவித்துள்ளார். (ச-5)


# மு க வரியழியாதோ

முருங்கை மரமொத்தத் தைமுதிரைக்கு
ஒப்பிட்டோ கை யெடுத்தோம் தமிழகத்தை
சோனி யாகைப் பாவைநீ யென்றறியா
ஈழத் தமிழரெல்லாம் உனக்கு ஈனத்தமிழரானோம்

சுய நலமே முழுநலமு மெனவாழும்
முத்துவேலன் பெற்றெடுத்த மு க வரியழியாதோ
கட்டுண்ட கடி நாயைவிட
காடு வாழ் ஓநாய் திறமன்றோ

-அறியாதவன்

# அவசரகால விதிகளைத் தளர்த்துமாறு அமெரிக்க அரசாங்கம் கோரிக்கை



(கொழும்பு)

அவசரகால விதிகளைத் தளர்த்துமாறு இலங்கையை அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. அத்துடன் முகாம்களில் வைக்கப்பட்டுள்ளவர்கள் மற்றும் ஏற்கெனவே விடுதலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கையை வெளியிடுமாறு அமெரிக்கா கோரியுள்ளது.

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் றொபர்ட் ஓ பிளேக் கொழும்பு நாளிதழ் ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

பெரும்பாலான இடம் பெயர்ந்தோர் ஏற்கெனவே விடுதலையாகியுள்ளதாக அவர் ஏற்றுக்கொண்டார். எனினும் குற்றம்சுமத்தப்படவுள்ளவர்களின் விபரங்கள் அவர்களின் குடும்பத்தினரின் நிம்மதிக்காக தெரிவிக்கப்படுவது அவசியம்.

அவசரகால விதிகளையும் உயர் பாதுகாப்பு வலயங்களையும் குறிப்பாக வடக்கில் கத்தரிப்பது அவசியம். புதிய உள்ளூர் தலைவர்கள் உருவாகுவதற்கு ஏற்ப வடக்கில் தேர்தல்களை நடத்த வேண்டும்.

மனிதாபிமான அமைப்புக்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கையின் வட பகுதியில் அரசியல் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு உதவி அளிப்பதற்காக அங்கு செல்ல அனுமதிப்பதன் அவசியத்தையும் றொபர்ட் ஓ பிளேக் வலியுறுத்தினார்.

அதேவேளை ஏதேனும் யுத்தக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஆராய்வதற்கான ஓர் பொறிமுறையாக கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும்நல்லிணக்க ஆணைக்குழுவிற்கு அமெரிக்காவின் ஆதரவையும் அவர் மீள உறுதிப்படுத்தினார். (ச-5)

# சிகிரியாக் குகையை பாதுகாக்கத் திட்டம்

## றூபசிங்க தகவல்

(கொழும்பு)

வரலாற்றுச் சிறப்புமிக்கதான சிகிரியா ஓவியக் குகையினை பாதுகாப்பதற்காக சர்வதேச உதவிகளை நாடவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. கலை, கலாசார அமைச்சின் செயலாளர் விமல் றுபசிங்க இத்தகவலை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் வேண்டுகோளிற்கிணங்கவே இம் முயற்சிகள் மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் இதற்காக இத்தாலியிலிருந்து எதிர்வரும் ஜனவரி மாதம் குழுவொன்று வரவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ச-7)

# இணையக் குற்றங்கள் இலங்கையில் அதிகரிப்பு

## அவசரகால பதிலளிப்புக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த ஆறு மாதங்களில் இணையத்தளங்களுடனான குற்றச் செயல்கள் தொடர்பில் சுமார் 160 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக இலங்கைக் கணனி அவசர காலப் பதிலளிப்புக் குழு தெரிவித்தது.

அண்மைக் காலமாக இலங்கையில் இணையத் தளங்களுடனான குற்றச் செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்படுவதைத் தம்மால் அவதானிக்கக் கூடியதாகவிருந்ததாக இலங்கைக் கணனி அவசரகாலப் பதிலளிப்புக் குழுவைச் சேர்ந்த ரோஹன பல்லிய குரு தெரிவித்தார். சுமார் 160 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இரகசியக் குறியீடுகளைக் கைப்பற்றுதல், தகவல்களைத் திரட்டுதல், கப்பம் கோருதல், பேஸ்புக் மற்றும் கடனட்டைகள் ஆகியன தொடர்பான குற்றச் செயல்கள் குறித்த முறைப்பாடுகளே அதிகம் கிடைக்கப் பெற்றதாகவும் ரோஹன பல்லியகுரு தெரிவித்தார். (ச-5)

# இலங்கையின் தேசிய மலர் தொடர்பில் புதிய சர்ச்சை கிளம்பியுள்ளது

(கொழும்பு)

இலங்கையின் தேசிய மலராக நீல அல்லி (நீலோற்பலம்) என சரியாகப் பெயர் குறிப்பிடப்பட்டாலும் அதற்கென பயன்படுத்தப்படும் மலரின் படம் பிழையானது என்ற சர்ச்சை தற்போது எழுந்துள்ளது.

இச் சர்ச்சையை கிளப்பிவிட்டுள்ளவர் பேராதனைப் பல்கலைக்கழக தாவரவியல் பேராசிரியை தீப்தியகன்தாவலையும், வயம்ப பல்கலைக்கழகத்தின் தாவரவியல் சிரேஷ்ட விரிவுரையாளர் கபில யகன்தாவலயுமாகும்.

இலங்கையின் தேசிய மலராக 1986 ஆம் ஆண்டுமுதல்பிரகடனப்படுத்தப்பட்ட நீல அல்லி மலருக்குப் பதிலாக இலங்கையின் அரச இணையத்தளங்களிலும், பாடசாலைப் பாடப் புத்தகங்களிலும், ஏனைய அரச ஆவணங்களிலும் பிழையான ஓர் காட்டு மலர் காட்டப்பட்டுள்ளதாகவும் அது வெளிநாட்டிலிருந்து அறிமுகம் செய்யப்பட்டதாகவும் பேராதனைப் பல்கலைக்கழக தாவரவியல் பேராசிரியை தீப்தியகன்தாவலையும் வடமேல் மாகாண (வயம்ப) பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரான கபில யகன்தாவலயும் தெரிவிக்கின்றனர். முன்னர் நில்மானெல் என்று அழைக்கப்பட்ட அம் மலர் தற்போது நவுச்சலி என்ற பெயரில் அழைக்கப்படுவதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

இதனால் பல பிரச்சினைகள் உருவாகியுள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் தாவரவியல் பேராசிரியர் தீப்தியகன்தாவல கூறுகின்றார். இலங்கைக்கு பொருத்தமானமலர் ஒன்றினையே தேசிய மலராக அறிமுகம் செய்த போதும் தவறான மலர் ஒன்றின் படத்தையே பிரசுரம் செய்து வந்துள்ளதாகவும் கூறுகின்றார்.

இலங்கையிலுள்ள தற்போதைய ஆவணங்களில் குறிப்பிடப்படும் நீல அல்லிப்பூவின் படம் பிழையானதாகும். அது கூடுதலான ஊதா வர்ணத்தைக் கொண்டது. ஆனால் உண்மையான நீல அல்லிப்பூ இளம் வர்ணமுடையது என்றும் பேராசிரியர் தீப்தியகன்தாவல கூறுகின்றார். (ச-5)

# இந்திய- தென்னாபிரிக்க அணிகள் மோதும் முதலாவது டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பம்

(சென்சூரியன்)

இந்திய- தென்னாபிரிக்க அணிகள் மோதும் முதலாவது டெஸ்ட் இன்று சென் சூரியனில் ஆரம்பமாகிறது.

தோனி தலைமையிலான இந்தியக் கிரிக்கெட் அணி 3 டெஸ்ட், ஒரே ஒரு இருபது-20 போட்டி மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுவதற்காக தென்னாபிரிக்கா சென்றுள்ளது.

இந்தியா- தென்னாபிரிக்க அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி சென்சூரியன் மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது. இப் போட்டிக்காக இரு அணி வீரர்களும் தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்திய அணி சமீபத்தில் தனது சொந்த மண்ணில் நியூசிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை 1:0 என்ற கணக்கில் கைப்பற்றியது. இதனால் அதிக நம்பிக்கையுடன் இந்திய வீரர்கள் உள்ளனர்.

இந்திய அணி இதுவரை தென்னாபிரிக்காவில் 4 முறை டெஸ்ட் தொடரில் விளையாடியுள்ளது. ஆனால் ஒரு முறைகூட தொடரை வென்றது இல்லை. இதனால் முதன் முறை





யாக தொடரை வென்று இந்திய அணி சாதிக்குமா? என்று இந்திய இரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றார்கள்.

தென்னாபிரிக்காவில் இந்திய அணி ஒரே ஒரு டெஸ்ட்டில் மட்டுமே வெற்றிபெற்று இருக்கிறது. 2006 ஆம் ஆண்டு ஜோகன்ஸ்பேர்கில் நடந்த டெஸ்ட்டில் இந்திய அணி 123 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றிருந்தது. 6 டெஸ்ட்டில் தோல்வியுற்றிருந்தது. 5 டெஸ்ட் சமநிலையில் முடிவடைந்தது.

இந்திய அணியின் துடுப்பாட்டத்தில் டிராவிட், சேவாக், லக்ஸ்மன், அணித்தலைவர் தோனி ஆகியோர் நல்ல நிலையில் உள்ளனர்.

அண்மையில் இந்தியாவில் நடந்த நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் டெண்டுல் கர் ஒரு சதம் கூட அடிக்கவில்லை. இந்தத் தொடரில் அவர் தனது 50-வது சதத்தை அடித்துச் சாதனை படைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தென்னாபிரிக்காவின் வேகப்பந்துவீச்சு இந்தியத் துடுப்பாட்ட வீரர்களுக்கு சவாலாக இருக்கும்போது மோர்னே மோர்கல், ஸ்ரெய்ன் ஆகியோர் திறமைவாய்ந்த வேகப்பந்து வீரர்கள் ஆவார்கள்.

இந்திய அணியின் வேகப்பந்து வீரரான சகீர்கான் இன்னும் முழு உடல்தகுதியுடன் இல்லை. அவர் ஆடாமல் போனால் பந்துவீச்சில் சற்றுப் பலவீனம் ஏற்படும்.

தென்னாபிரிக்க அணியின் துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் சிமித், அம்லா, கலிஸ், டிவில்லியர்ஸ் ஆகியோர் நல்ல நிலையில் உள்ளனர்.

போட்டி இலங்கை நேரப்படி பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகிறது.

இரு அணி வீரர்களும் வருமாறு,



இந்தியா:- தோனி (அணித்தலைவர்), சேவாக், காம்பீர், டிராவிட், டெண்டுல்கர், லக்ஸ்மன், ரெய்னா, ஹர்பஜன் சிங், ஓஜா, சகீர்கான், இஷாந்த் சர்மா, ஸ்ரீசாந், புஜாரா, முரளி விஜய், ஜெய்தேவ் உன்கட், உமேஷ் யாதவ், விர்த்திமான் சகா.

தென்னாபிரிக்கா:- சிமித் (அணித்தலைவர்), ஹசிம் அம்லா, டிவில்லியர்ஸ், கலிஸ், அஸ்வெல் பிரின்ஸ், மார்க் பவுச்சர், ஸ்ரெய்ன், போர்னோ மோர்கல், மக்லரன், போல் ஹாரிஸ், டிகோசோபே, பீற்றர்சன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஸ் நிலையத்தில் மோதல் மூவர் மீது வாள் வெட்டு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய பஸ் தரிப்பு நிலையத்துக்கு அருகில் நேற்று இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் மூவர் வாள் வெட்டுக்கு உள்ளாகிச் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வாகன முகவர் ஒருவருக்கும் செருப்புத் தைக்கும் தொழிலாளி ஒருவருக்கும் இடையில் நேற்று மாலை 3.00 மணியளவில் வாய்த் தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

பின்னர் வேறு மூன்று நபர்கள் சென்று அத்தொழிலாளியைத் தாக்கியுள்ளனர். தரகர்தான் இதனைச் செய்தாரென முடிபு செய்த தொழிலாளி வாள் ஒன்றை எடுத்துக் கொண்டு வந்து தரகரை வெட்டியுள்ளார்.

தரகரும் இன்னொரு வாளை எடுத்து தொழிலாளியை வெட்டியுள்ளார். இருவரும் வாள்களால் வெட்டுப்பட்டுக் கொண்டிருந்த போது குறுக்கே வந்த பெண்ணொருவருக்குக் காயம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் தொழிலாளி அச்சுவேலி செல்கின்ற சிற்றூர்தியில் ஏறிச் சென்றார்.

பயணிகள் இரத்தக் காயங்களோடு கூடிய இவரின் தோற்றத்தைக் கண்டு பீதியடைந்து குளறினர். பொலிஸார் தகவலறிந்து சம்பவ



இடத்துக்கு வந்தனர். மூவரையும் கைது செய்து வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர்.

இச்சம்பவத்தில் வாகனப் போக்குவரத்துத் தரகரான மட்டுவிலைச் சேர்ந்த பாண்டியன் செல்வராசா (வயது 57) மற்றும் சுழிபுரத்தைச் சேர்ந்த தொழிலாளியான இராஜேந்திரன் (வயது 40) ஆகிய இருவர் உட்பட மூவரே காயமடைந்தவர்களாவர். (ச-5)

## காயமடை...

பத்தைச் சேர்ந்த மூன்று பூசகர்கள் இரவு 8.30 மணியளவில் இனந்தெரியாத ஆயுததாரிகளின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு சிகிச்சை பெற்று வந்தவர்களில் ஒருவரான நித்தியானந்த சர்மா சிகிச்சை பலனின்றி நேற்றிரவு உயிரிழந்ததாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-7)

## இராணுவச்...

வேறு கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் போதைக்கு அடிமையான இராணுவச் சிப்பாய் ஒருவருக்குப் பணம் கொடுத்து அவர் வைத்திருந்த துப்பாக்கியை அவர்கள் பெற்றுள்ளனர்.

அதைப் பயன்படுத்தியே சங்கானையில் மூன்று பூசகர்கள் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் மீது இராணுவச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் கூறினார். (எ-5)

## வைகோவின் மனு குறி...

மீதான தடையை நீட்டித்து மத்திய அரசு கடந்த மே,14ம் திகதி உத்தரவு பிறப்பித்தது. அதன் பின்னர், தடை விதிக்கப்பட்டதற்குப் போதிய காரணங்கள் இருக்கின்றனவா என்பது குறித்து ஆராய மத்திய தீர்ப்பாயம் அமைக்கப்பட்டது.

அந்தத் தீர்ப்பாயம் விசாரணை நடத்தி விடுதலைப் புலிகள் இயக்கம் மீது மத்திய அரசு தடை விதித்தது சரியானதுதான் என்று கடந்த மாதம் தீர்ப்பளித்தது.

தீர்ப்பாயத்தின் உத்தரவை எதிர்த்து வைகோ சென்னை உயர் நீதிமன்றத்தில் கடந்த 9ம் திகதி மனுத்தாக்கல் செய்திருந்தார். அந்த மனு தலைமை நீதிபதி எம்.வை.இக்பால், நீதிபதி டி.எஸ்.சிவஞானம் ஆகியோர் அடங்கிய குழு முன்னிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது.

விசாரணையின் போது சாட்சியமளித்த வைகோ, "தீர்ப்பாய உத்தரவில் ம.தி.மு.க, விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவான அமைப்பு என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்ய எனக்கு வாய்ப்புக் கொடுக்கவில்லை. தீர்ப்பாயத்தின் உத்தரவால் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர், அனுதாபி என்ற அடிப்படையில் நான் பாதிக்கப்பட்டுள்ளேன்" எனத் தெரிவித்தார்.

மத்திய அரசின் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் எம்.ரவீந்திரன் கூறுவது போல் தீர்ப்பாயத்தின் உத்தரவை எதிர்த்து மத்திய அரசிடம் மனு செய்யலாம் என்பதைச் சரியான நிவாரணமாகக் கருத முடியாது.

எனவே தீர்ப்பாய உத்தரவுக்குத் தடை விதிக்க வேண்டும் என்றும் அவர் வாதிட்டார். இதனையடுத்து இந்த வழக்குத் தொடர்பாக மத்திய அரசு 3 வாரங்களுக்குள் பதிலளிக்க வேண்டுமென்று நீதிபதிகள் உத்தரவிட்டனர். (ச-5)

## மன்மோகன், கலைஞர், சிதம்...

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை கொலை செய்வதற்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் திட்டமிடுவதாக இந்தியப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று மாலை எச்சரிக்கை விடுத்ததாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஏறத்தாழ அழித்தொழிக்கப்பட்டுவிட்ட விடுதலைப் புலிகள் மீண்டும் ஒன்றிணைவதற்கு முயற்சிப்பதுடன் பிரதமர் மன்மோகன் சிங், உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம், தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி ஆகியோரை இலக்கு வைத்து பாரிய தாக்குதல்களைத் தொடுப்பதற்கும் திட்டமிடுவதாக அச் செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கருணாநிதியைச் சந்திக்கின்றமைக்காக அடுத்த மாதம் தமிழ்நாட்டுக்குச் செல்ல மன்மோகன் சிங் உத்தேசித்து உள்ளார். இவருடன் சிதம்பரமும் கூடச் செல்லவிருக்கின்றார்.

இச் சந்திப்பின் போதே மூவரையும் கொல்கின்றமைக்கு புலிகள் திட்டம் தீட்டியுள்ளனர் என்று இத்தகவல்கள் கசிந்துள்ளன.

மன்மோகன் சிங், கருணாநிதி, சிதம்பரம் ஆகியோரைக் கொல்லப்படவேண்டியவர்கள் பட்டியலில் புலிகள் வைத்திருக்கின்றனர் என்றும் மூவரையும் கொல்கின்றமைக்காக சில புலிப் பிரமுகர்கள் தென்கடல் ஊடாக வந்து தமிழ்நாட்டில் மறைந்து வாழ்கின்றனர் என்றும் அதில் தெரிவிக்கப்படுகின்றது.

யுத்தத்தின்போது தப்பிச் சென்ற விடுதலைப் புலிகளின் அங்கத்தவர்கள் சிலர் இந்தியாவில் மீளிணைவதற்கும் முக்கிய அரசியல் தலைவர்கள் தமிழ்நாட்டிற்கு விஜயம் செய்யும்போது அவர்களைக் கொலை செய்வதற்கும் முயற்சிப்பதாகவும் புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்துள்ளனவாம்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி, 1991 ஆம் ஆண்டில் தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையினரால் கொலை செய்யப்பட்ட நிலையில் இந்தியப் புலனாய்வுப் பிரிவினர் இத்தகவல்களைத் தீவிரமாகக் கருத்திற் கொண்டுள்ளனர்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அடுத்த மாதம் தமிழ்நாட்டிற்கு விஜயம் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

உடனடியாக உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு தமிழ்நாடு பொலிஸ்மா அதிபர் லத்திகா சரணுக்கு புலனாய்வுப் பிரிவினர் தகவல் அனுப்பியுள்ளனர். இத்தகவலையடுத்து இந்திய அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (ச-5)

## புலிகளுக்கு மீண்டும் உயி...

இயக்கத்தின் புலம்பெயர் சக்திகளை ஒன்று திரட்டிப் புலிகளுக்கு மீண்டும் உயிரூட்டப் பல வெளிநாடுகள் முயற்சிக்கின்றன என்று குறிப்பிடுகின்றார்.

கவசப் படையணியின் ஐம்பது வருடப் பூர்த்தியை முன்னிட்டு நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

என்னதான் வெளிநாட்டிலுள்ள புலி ஆதரவுச் சக்திகளை ஒன்று திரட்டி இலங்கையில் மீண்டும் பயங்கரவாதத்தை உருவாக்க யார் முயற்சித்தாலும் நாங்கள் அதற்கு இடமளிக்க மாட்டோம். இலங்கையில் இன்னொரு தடவை பயங்கரவாதத்தின் நிழல் கூடத் தலையெடுக்க நாங்கள் வாய்ப்புக்களை விட்டு வைக்க மாட்டோம்.

இலங்கையிலிருந்து பயங்கரவாதத்தை முற்றாகத் துடைத்தெறிந்ததை நிரந்தரமாக்கிக் கொள்வதாயின் இராணுவத்தினர் மக்கள் மத்தியில் நல்ல பெயர் எடுக்க வேண்டும்.

அதற்கென அபிவிருத்திப் பணிகளில் இராணுவத்தினர் தங்களாலான பங்களிப்பை நல்க வேண்டும் என்றும் அவர் மேலும் வலியுறுத்தினார். (ச-5)

## அகதிகள் படகு கவிழ்ந்து...

இப்படகில் பயணித்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இதில் பயணித்தவர்களில் இலங்கைத் தமிழர்களும் இருந்திருக்கலாம் எனவும் கூறப்படுகிறது.

கடல் என்றுமில்லாதவாறு கொந்தளிப்பாக இருந்து வருகிறது. இந்தக் கொந்தளிப்பான நிலைக்குள் படகு வருகிறது என்றால் அது தாங்களாகவே வினையைத் தேடிக்கொள்வதற்குச் சமம். அந்தப் படகு சிதறிக் கடலில் மூழ்குவதை நான் பார்த்தேன் என்று கிறிஸ்மஸ் தீவில் வசித்து வரும் ஒருவர் கூறியுள்ளார்.

குழந்தைகள் படகிலிருந்து தூக்கிப் பாறையை நோக்கியும் கடலிலும் எறியப்பட்டதை கிறிஸ்மஸ்தீவு மக்கள் கண்டார்கள். அப்படிக் கண்டவர்கள் அதிர்ச்சியில் உறைந்து போய் இருக்கிறார்கள். அவர்களுக்கு உளநல ஆலோசனை அவசியமாக இருக்கிறது.

அண்மைய நாட்களில் பாறைகள் தொடர்ந்து சரிந்து வருவதால் கிறிஸ்மஸ் தீவின் இறங்கு துறை மூடப்பட்டுக் கிடக்கிறது. இது மிகவும் மோசமான ஒரு நிலைமை. உண்மையிலேயே கடினமான சூழ்நிலை என அங்குள்ள பெண்மணி ஒருவர் கூறியுள்ளார்.

கிறிஸ்மஸ் தீவைச் சேர்ந்த வேறு சிலர் இது பற்றி விபரிக்கையில், மக்கள் எதைக் கண்டார்களோ அதை ஜீரணிக்க முடியாமல் இருக்கிறார்கள். இச்சம்பவத்தை நேரில் கண்ணுற்றவர்களில் கண்ணீர் விடாதவர்கள் எவருமே இலர்.

அலைகள் எழுந்து பாறையில் மோதியது. பாறையில் மோதிய படகு கிறிஸ்மஸ் தீவின் ஒரே இறங்கு துறையான பிளைங் பிஷ் கோவ் இல் தரைதட்ட முயற்சி செய்தது. ஆனால் துரதிர்ஷ்டம் அது முடியாமல் போய்விட்டது.

20 க்கும் மேற்பட்ட உள்ளூர்வாசிகள் உயிர் காப்புக் கவசங்களையும் கயிறுகளையும் எறிந்து அகதிகளைக் காப்பாற்ற முயற்சித்தார்கள்.

ஆனால் கடல் கடும் கொந்தளிப்பாக இருந்தது. படகோ பாறையுடன் மோதிச் சிதைந்து போய்விட்டது. எவராலும் அவர்களுக்கு உதவ முடியாமல் போய்விட்டது.

அவ்வளவுக்கு நிலைமை மோசமாக இருந்தது. சம்பவம் நடந்து 15-20 நிமிடங்களுக்குப் பிறகு கடற்படையினரின் உயிர்காப்புப் படகு வந்து முடிந்தவரை கடலில் தத்தளித்தவர்களைக் காப்பாற்றியது என்றனர். (ச-5, 7)

## அரசாங்க அதிருப்தியாளர்...

ஏற்பட்ட எழுச்சியைத் தொடர்ந்து முன்னெடுத்துச்சென்று குறுக்கிய காலத்திற்குள் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தை அமைக்கப் போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

1975 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி தனது வருடாந்த மாநாட்டை நடத்தி இரண்டு வருடங்களுக்குள் ஆட்சியைக் கைப்பற்றியது.

இதன்படி இம்முறை நடத்தப்பட்ட சம்மேளனத்தை உந்துசக்தியாகக் கொண்டு மிகக் குறுகிய காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அமைக்கப்படும்.

கட்சியின் அனைவரும் ஐக்கியமாகவும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டதன் காரணமாக கட்சியின் சம்மேளனத்தை வெற்றிகரமாக நடத்த முடிந்தது.

இந்த அர்ப்பணிப்பு மற்றும் ஐக்கியம் மூலம் கிராமிய, நகர மட்டத்தில் கட்சியை வலுப்படுத்தி அரசாங்கத்தை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கயந்த கருணாதிலக குறிப்பிட்டுள்ளார். (ச-5)


# பொருளியற் கல்லூரி

நாவலர் றோட் ,யாழ்ப்பாணம். K.K.S.றோட்,இணுவில்.

(இரு இடத்திலும்)

**A/L DAY CLASS** கலை – வர்த்தகப் பிரிவு ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

| பாடம் | யாழ். நகரில் | இணுவிலில் |
|---|---|---|
| ☆ பொருளியல் | வரதராஜன் | மகேந்திரன் |
| ☆ கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் |
| ☆ வணிகக்கல்வி | முரளி | முரளி |
| ☆ தமிழ் | சத்தியவேந்தன் | சத்தியவேந்தன் |
| ☆ இந்துநாகரிகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் |
| | N.T.தரன் | |
| ☆ புவியியல் | குமரன் | குமரன் |
| ☆ வரலாறு | சுதன் | சுதன் |
| ☆ அரசியல் | கோகுலன் | கோகுலன் |
| ☆ அளவையியல் | ஜெய சுரேஸ் | ஜெய சுரேஸ் |
| | R.S. சந்திரன் | |
| ☆ நாடகம் | கணேஷ் | கணேஷ் |
| ☆ விவசாயம் | விக்கி | விக்கி |
| ☆ கிறிஸ்தவம் | வசந்தன் | வசந்தன் |
| ☆ இந்துசமயம் | N.T.தரன் | N.T.தரன் |
| ☆ இலகு கணிதம் | ஐங்கரன் | ஐங்கரன் |
| ☆ மனைப் பொருளியல் | தர்சிகா | தர்சிகா |
| ☆ ஆங்கிலம் | நிஷாந்தன் ,ஜைஷன் | நிஷாந்தன் ,ஜைஷன் |



(C-1833)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org